அறிவை அடக்கும் அடக்குமுறையை எதிர்ப்போம்

Phone No. 4502
விலை அணு ஒன்று]

Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1 | சென்னை (25—10—49) | வெளியூர் (26—10—49) | இதழ் 73

எங்கள் ஏடுகள்-விவேகத்தின் விளைவு; விஷமத்தனமல்ல

சிறைக்கோட்டம் கூட்டுக் கட்சியினரின் கோட்டையாக மாறும்!

—————(0)—————

ஆண்டவன் பெயரால் அழிவு வேலை!

[கோவையில் தோழர் அண்ணத்துரை பேசிய சொற்பொழிவின் பிற்பகுதி நேற்றைய தொடர்ச்சியாகக் கீழே தரப்படுகிறது.]

அழிவு வேலையா ஆக்க வேலையா?

மேல் நாட்டில் புதுபபுது ஆயுதங்கள் கண்டு பிடிததனா என்றால், அவையாவும அழிவுக கருவிகள். ஆளைககொலலும அணுகுண்டு. போட்டால வெடிக்கும பாம்; சுட்டால சாகடிக்கும் துப்பாககி; இப படித்தானே மேல நாட்டில். என்று ஏசுவர், பேசுவர். பழிப் பர். பண்பட்ட உள்ளம படைத்தது கீழ் நாடு. இங்கு அழிவுக்கருவிகள் இல்லை. மேல் நாட்டைப்போல என பர். மேல நாட்டில் தான் அழி வுக்கருவிகள் உண்டு நம நாட டில் இல்லை என்று பேசுவது-வாதிடுவது தவறு. மேல நாட்டில் அழிவுககருவி யிருக் கிறது. நம நாட்டில அதுபகதி மூலம், ஆண்டவன பேராலே நடக்கிறது. பேதம அது தானே, அங்கும இங்கும். இராமாயணத்தில் அனுமார் இலங்கையைக் கொளுத்தியது அழிவு வேலையா? ஆககவேலை யா? சிவபெருமான் நெற்றிக கண்ணைத்திறநது திரிபுரததை யுமெரித்தது அழிவுவேலையா? ஆக்க வேலையா? சொலலுங் கள்! இன்னும் எததனையோ காட்சிகள், கருத்துககள், சம் பவங்கள், இதுபோல் நம நாட டில், மேல் நாட்டில அழிவுக கருவிகள் உண்டு எனபோர் ஒரு உண்மையை அடியோடு மறந்துவிடுகிறார்கள். அஙகு, அழிவுக் கருவிகளை விட ஆகக வேலைக்கருவிகள், அமோகம, அளவற்றவை என்பதை மறநதுவிடுகின்றனா. டெலி போன் என்ன? அழிவுக கரு வியா? ஆக்கவேலைக் கருவியா? தந்தி, டெலிவிஷன இரயில வண்டி, ரேடியோ, ஆகாய விமானம் இன்னும் என னென்ன உண்டு. அவைமனித வாழ்வில் எவ்வளவு ஆனந தத்தை உண்டுபண்ணுகின றன. வாழ்க்கைத்தரத்தை எவ் வளவோ உயர்த்தி விட்டிருக கின்றன. ஆயிரம் அலலது இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் மறைந்து சமாதியாகி விட்ட மகரிஷி ஒருவரை, முடிந்தால் சமாதியிலிருந்து எழுப்பி, கல்லறையை விட்டுக் கூட்டி வந்து, பாபாத்மாக களாகிய நாம் வாழும் இக் காலத்தைப்பாரும் என்றால், என்ன செய்வார்! டெலிபோன் ஒருபக்கம் இரயில்வே மற்றொ ருபக்கம், ரேடியோ மற்றொரு பக்கம் என்று பார்த்தவுடன மலைத்துப்போய், அப்பா, பாபாத்மாக்களாகிய உங்கள் காலத்திலிருப்பது எங்கள் காலததில இல்லையே, சரி-சரி இது எபபடி என்று மறுபடி யும தவம செயது காணபேன-என்று மறுபடியும் காணகப ஏகும குழபப நிலைதான இருக கும.

விஞ்ஞானத்தின் சிறப்பு

இககாலம விஞ்ஞான காலம யாவும மேல நாட்டு அறிவு, உழைபபு, கரு விகள் தரும வசதிகள். உடலிலே கட்டி உண்டாகி விட்டதா—ரண சிகிசசை செய்து கொள்ளலாம. கண கெட்டுவிட்டதா—கண் ஆஸ பததிரிககுப் போ — சிகிச்சை பெறு—கண்ணாடி போட்டுக கொள்ளலாம. பாரதக் கதை யிலே வரும திருதராட்டித னுக்குக கண கெட்டது கடைசிவரை கெட்டதேதான. அவர் மனுநீதி மன்னன. அரி பரந்தாமனையும ஆட்டிப படைதத துரியோதனன் தகப் பனாக இருநதும பயனில்லை. விஞ்ஞானி எத்தனை இரவுகள் சிநதித்தானோ—எததனை நாட கள உழைததானோ, நாமறி யோம. ஆனால அதன பலனை இன்று அனுபவிக்கிறோம பைத்தியக்காரன என்று பலர் கேலி செயதிருப்பா. சிலர் சீறி யிருபபார் — சிலா நையாண்டி செய்திருப்பர்.

ரோஷமுள்ள சர்க்காரானல்...?

விஞ்ஞான அறிவை வளா த்து வைதிக அறிவை அழிகக தி. மு. கழகம உறுதியுடன போராடிததீரும். நான பெரி யாரோடு மற்ற எவரையும விட அதிகம பழகியவன அவா வெளிக்கு அலலாமல நெஞ்சார எனனை துரோகி என்று கூறமுடியாது. —உண்மையில நான் துரோகி அலல என்ற காரணத்தால். இந்த விதம நமககுள்ள பேதம இன்றோடு துவக்க விழாவோடு முடியட டும இத்தகையபேசசுக்கள் நிற கட்டும, பணி தொடஙகட்டும. இத்தகைய இடைக் காலத் தைப பயன்படுத்தி சர்ககார் நம்மையோ—பெரியாரையோ ஒழிக்க நினைத்தால் அது முடி யாது. தாககுதல நேரத்தில இருவரும் ஒன்றே—அது எப் போதும தெரிந்த செய்திதான். இரணடு நாட்களுக்கு முன் சாக்கார் "கருஞ்சட்டை ஒழிய வேண்டுமா" என்ற புத்த கத்தைப் பறிமுதல் செய்திருக் கின்றனா். அதை அச்சடிததத அச்சகததிற்கு ரூபாய் மூவா யிரம் ஜாமீன் கேட்டிருககின்

[தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க]

அரசியலுக்கு அடிப்படை அறிவியல்

டாக்டர் தாராசந்த் சுட்டிக்காட்டுகிறார்

அண்மையில் லண்டனில் இந்திய ஹை கமிஷனர் தோழர் கே. வி. கே. கிருஷ்ணமேனன் அவர்கட்கு அளிக் கப்பட்ட விருந்தொன்றின் போது, இந்தியக் கல்வி அமைச்சரின் அலுவ லகச் செயலாளர் டாக்டர் தாராசந்த் அவர்கள், இந்தியாவில் கல்வி புகட் டும் வேலை பாதுகாப்புப் பணியைப் போல் அவ்வளவு முக்கியமானது என்றும், அரசியல் அமைப்பு சபை வயது வந்தோருக்கெல்லாம் வாக்கு ரிமை அளிக்க முடிவு செய்திருக்கி றது. தற்போது மக்களில் 15 சத விகிதத்தினரே கல்வி அறிவு படைத் தோரா யிருக்கின்றனர். அனைவரும் புத்தி செலுத்தி பொறுப்புடன் தங்கள் வாக்குகளை அளிக்க இயலும்" என்று பேசி யிருக்கிறார்.

எந்த ஆட்சி முறையும் செம்மை யாக நடைபெற வேண்டுமானால், ஆட்சியாளரைத் தேர்ந்தெடுக்கும் மக்கள், அறிவுத் துறையிலே முன் னேறியவர்களாக இருக்கவேண்டும். எனவேதான் அரசியலுக்கு அறிவி யல் அடிப்படை என்று திராவிடர் இயக்கம் விடாதுசொல்லிக்கொண்டு வருகிறது. இப்பொழுது நடைபெறும் காங்கிஸ் ஆட்சியில் ஊழல்கள் மலிந்திருப்பதற்கும், நிருவாகம் சரி வர நடை பெறாமைக்கும் காரணம் நாட்டு மக்களுக்குப் போதிய கல்வி யறிவு இல்லாமையே யாகும். கல்வி யறிவு குறைந்துள்ள மக்களிடையே காங்கிரசார் சுலபத்தில் நாட்டுப் பற்றை உற்பத்தி செய்து, அதையே முதலாகவைத்துத் தேர்தல்வேட்டை யாடி அரசியலைப் பிடித்து விட்டனர். அதாவது தேச பக்தர்கள் எனப் படுவோரே பதவியைக் கைப்பற்றும் வாய்ப்பு கிடைத்தது.

பொதுவாக தேச பக்தர்கள் வேறு அரசியல் வாதிகள் வேறு. தேச பக்தியும், அரசியல் அறிவும் ஒன்று பட்டு இயங்குவதில்லை. இன்று இந் நாட்டு ஆட்சியாளரிடம் தேச பக்தி மிகுந்து காணப்படுகிறதே யன்றி, நிருவாகத்திறம் போதி அளவுகாணப் படவில்லை. முன்னாள் அமைச்சர்கள் அரசாங்க ஊழியர்களின் உதவி கொண்டே ஆட்சி நடத்த வேண்டிய நிலைமையிலிருக்கின்றனர். இந் நிலை மாற வேண்டும். அதாவது அரசியல் நிபுணர்கள் ஆட்சிப் பீடத்தைக் கைப் பற்றும்படி செய்ய வேண்டும். அதற்கு ஆட்சியாளரைத் தேர்தெடுக் கும் மக்களிடையே போதிய கல்வி யறிவு வளர வேண்டும். அதற்கு தற் போது அரசியலார் கல்விக்காகச் செலவிடும் தொகை போதாதது. ஒரு நாட்டின் கல்வி வளர வேண்டு மானால், அரசியலார் மற்ற விஷயங் களுக்காகச் செலவிடுவதைவிட கல் விக்காக அதிகப் பணம் செலவிட வேண்டும். பள்ளிக் கூடங்களின் எண்ணிக்கை வளர வளர பண் பட்ட மக்களின் எண்ணிக்கை வளரும்.

ஆனால் இன்றைய நிலையில் நம் ஆட்சியாளர் இந்த உண்மையை உற்றுணர்ந்து நடப்பதாகத் தெரிய வில்லை. இந் நாட்டில் கல்விக்காகச் செலவிடப்படும் தொகை மிக மிகக் குறைவு. ஆசிரியர்களின் நிலையோ வருந்தத் தக்கது. எங்கு நோக்கினும் ஆசிரியர்கள் ஊதியம் போதவில்லை என்ற கூக்குரல் எழுந்த வண் ணம் இருக்கிறது. இந் நிலையில்கல்வி வளர்வது எங்ஙனம்? கல்வி வளராத நிலையிலே பண்பட்ட மக்கட்தொகை அதிகரிப்பது எங்ஙனம்? பண்பட்ட மக்கட் தொகை அதிகரிக்காத நிலையிலே பயனுள்ள ஆட்சி முறை அமைவது எங்ஙனம்?

மேலும் வருங்காலத்தில் வயது வந்தோர் அனைவருக்கும் வாக்குரிமை அளிக்கப்படுமாதலால், இப்போதுள் ளதுபோல் நூற்றுக்கு 15 பேரே கற்றறிவுடையோர் என்ற நிலை நிச் சயமாக மாறியாக வேண்டும். நூற் றுக்கு 15 பேரே கற்றோர் என்ற நிலை வெட்கக்கேடான நிலை. கல் லாதவர் தொகைகூட நூற்றுக்கு 15 ஆக இருத்தல் கூடாது. இதற்கு ஆவன செய்ய வேண்டுவது அரசிய லார் கடன் என்பதை வற்புறுத்திக் கூற விரும்புகிறோம்.

சென்னை சர்க்காருக்கா இந்த மனு?

விவசாயிகளின் வீண் முயற்சி!

உழவுத் தொழில் புரியும் ஊழி யர்களுக்குத் தரிசு நிலங்களைப் பிரித்துக் கொடுத்து, ஒரு சிறு தொகையைக் கடனாகவும் கொடுத் தால், பல புதிய நிலங்களைப் பயிர் விளையும் நிலங்களாக்கி, உணவு உற்பத்தியைப் பெருக்குவதாக உறுதி கூறி, பீமாவரம் உழவர்கள் சங்கக் குழுவினர் ஒரு தீர்மானம் நிறைவேற்றியுள்ளனர். இது நல்லதொரு வழிகாட்டும தீர்மான மாகும. வேலையற்றிருப்பவர்களில் ஆளுக்கு இவ்வளவு நிலம் என்று ஒதுக்கிக் கொடுத்து, சிறு எடுத் துத் தந்து. சிறு அளவு பணமும் கடனாகக் கொடுப்பதாகச் சென்னை அரசாங்கம் விளமபரப்படுத்தினால், உழவுத் தொழிலில் இறங்கப் பலர் முன்வரலாம். இவ்வாறு நிலத்தில் உழைக்க முன் வருபவர்களுக்கு அந்நிலம் சொந்தமாகசப்படு மெனில், அது ஒரு குடும்பத்தின ருடைய வாழ்க்கைக்குரிய செலவு களைச் சரிக்கட்டிக்கொண்டு போகக் கூடிய அளவில் இருந்தால், பல மக் கள் உழவுத் தொழிலில் ஈடுபடுவர். இதனால், பல புதிய நிலங்கள் பயி ரிடப்பட்டு உணவுப்பொருள் உற் பத்தி பெருகும். அரசாங்கத்திற்கு இதனால் அதிக செலவும ஏறபடப் போவதில்லை. கவனிக்குமா அர சாங்கம்!

பொதுச் சொத்துக்குப் பாத்தியம் கொண்டாடும் தேச பக்தர்கள்!

முன்னாள்பிரசாரத்தால் முடிந்தவிளைவு!

"வெள்ளைக்காரர்கள் ஆட்சியில் சாலை ஓரங்களில் மரங்களை வைத்து வளர்த்து வந்தனர். ஆனால், சுதந் தரம வந்துவிட்ட பிறகு, மக்கள் சாலையோர மரங்களைத் தங்கள்விருப் பம்போல் வெட்டிச் சாய்க்கத் தொடங்கி விட்டனர்."

என்று மயிலாப்பூரில் பேசிய சென்னை முதலமைச்சர் கூறினர்.

நாட்டுக்கு உரிமை வந்துவிட்ட படியால் என்னவேண்டுமானாலும் செய்யலாமென்னும்மனப்பான்மை, இந்த நாட்டிலே பொதுமக்கள் அனைவருக்கும் ஏற்பட்டுவிடவில்லை நாட்டு ஆட்சி உரிமை முழுவதும் தங்களுக்கே சொந்தமானது என் றும் நாட்டின் நன்மை தீமைகள் அனைத்தும் தங்களுடைய பொறுப்பேஎன்றும் கருதும் மனப் பான்மை, இதற்குமுன் தேச பக்தர் கள் என்னும் லேபிள் ஒட்டித் திரிந் தவர்களிடையேதான் ஏற்பட்டிருக் கிறது. சுதந்திரத்திற்குப் பின் ஏற் பட்ட இத்தகைய மனப்பான்மை காரணமாக நாட்டின் பொது மக் கள் நன்மைகள் பல இதனால் நாச மடைவது பற்றி அவர்களுக்குக் கவலையில்லை. கள்ளமார்க்கெட் ஊழல்கள் நடத்துவது போன்ற அனைத்தும் இத்தகைய மாறுதல டைந்த மனப்பான்மை யுடைவர் களால்தான் ஏற்படுகின்றன. என வேதான்இத்தகைய மனப்பான்மை யுடைவர்களால்தான் சாலை ஓர மரங்கள் திடீர் திடீரென மறைகின் றன. வெட்டுண்டு போகின்றன. இந்த நிலைமைமாற வேண்டுமானால், நாட்டிலே நடைபெறுவது காங்கி ரஸ் கட்சி என்ற மனப்பான்மை மாறி மக்கள் ஆட்சி என்ற மனப் பான்மை வளர வேண்டும். வளர்க் கப்பட வேண்டும்! கவனிப்பாரா, முதலமைச்சர்!

மாலை மணி

சென்னை 25—10—49 செவ்வாய்க்கிழமை

'வருத்த வெண்பா!'

"இப்பொழுது இந்த நாட்டில் கையாளப்படும் கல்வித் திட்டத்தைப் பொறுப்பற்றத் தன்மையில் அலசிக்காட்டிக் குறை காணும் போக்கில், கல்வித்துறை அதிகாரிகள் ஈடுபட்டிருப்பதைப் பார்க்க மிக வருந்துகிறேன்"

எனக் கல்வி அமைச்சர் மாதவர் 'வருத்த வெண்பா' பாடியுள்ளார், அடிப்படைக் கல்விப் பயிற்சிப் பள்ளிக்கூடத் தலைமையாசிரியர்கள் — தலைமையாசிரியைகள் மாநாட்டில் பேசும்போது.

கல்வித் திட்டத்தைப் பற்றிக் குறை கூறுகிறார்களாம், கல்வித் துறை அதிகாரிகள்; அது கண்டு வருந்துகிறாராம் அமைச்சர்! வருத்தம் எதற்கு? தாம் தீட்டிய திட்டம்-தாம் நிறைவேற்றிவைக்க ஆசைப்படும் திட்டம், கல்வித் துறை அதிகாரிகளால், குறை காணும் அளவிற்கு மிகமிக மோசமாக அமைந்திருக்கிறதே என்பது குறித்தா, வருத்தம்? அல்ல, அல்லவே அல்ல! பின்பு எதற்கு? தம்முடைய திட்டத்தைக் கல்வி அதிகாரிகள் குறை கூறுகிறார்களே, என்ற அந்தக் குறை கூறும் தன்மைக்காக வருந்துகிறாராம்! ஆகா! கல்வி அமைச்சர் தம் திட்டத் திடத்துக் கொண்டிருக்கும் பெருமையும், பற்றுதலும், அன்பும், ஆசையும் எத்துணை அளவு சிறந்தனவாக விளங்குகின்றன! என்னே இவர்தம் கல்வித் திட்டம்!

ஒரு நாட்டிற்கு ஏற்படுத்தப்படும் கல்வித்திட்டம் சரியாக வகுக்கப்பட்டிருக்கிறதா அல்லவா, நாட்டிற்கு ஏற்கக்கூடியதாக இருக்கிறதாஇல்லையா, மாணவர்களின் மனநிலைக்கு ஒத்து வருகிறதா அல்லவா, என்பன போன்றவற்றை ஆய்ந்தறிந்து நல்ல முடிவு கூறும் திறம், கல்வித்துறையின் நுட்பங்களையெல்லாம் நன்கு அறிந்திருக்கும் வாய்ப்புடைய கல்வித்துறை அதிகாரிகளுக்குத் தானே இருக்க முடியும். அத்தகைய அதிகாரிகள், மந்திரி மாதவரின் கல்வித் திட்டத்தில் குறைகாணுகிறார்கள் என்றால், அப்படிக் காணுவதிலே என்ன தவறு இருக்க முடியும்! கல்வித்துறை அதிகாரிகள் கூறும் ஆலோசனைகளைக் கல்வி அமைச்சர் ஒருவர் ஏற்று நடத்துவதைத்தான், நாகரிகப்பண்பு என்று கருதுவர் அறிவுடையோர். இங்குள்ள கல்வித்துறை அதிகாரிகள் போன்ற பொறுப்பு வாய்ந்த பதவியிலிருப்போர், கல்வித் திட்டத்திலே உள்ள குறைகளைச் சுட்டிக் காட்டினால், அது பொறுப்பற்றத் தன்மையின்பாற்பட்டதொன்றாகக் கொள்கிறார் "விசித்திர' மந்திரியார் மாதவ மேனனார்.

கொடுக்கும் அப்பம், மாவாகவே இருக்கிறது, அது தின்னுவதற்கேற்ற வகையில் அமையவில்லை, அதைத் தின்ன வேண்டுமானால், கொஞ்சம் நன்றாகச் சுட்டுத்தரவேண்டும் என்று அப்பத்தின் பக்குவம் அறிந்தவன் கூறினால், அதற்காக அரைகுறையாகச் சுடத் தெரிந்தவன், மற்றவன் மீது சீறி விழுந்து, "பொறுப்பற்றத் தன்மையிலே குற்றங் கூறுகிறாய், நான் இனிப் பொறுக்க மாட்டேன்" என்று கூறுவானானால், அவனைப்பற்றி என்ன எண்ணுவோமோ, அதைத்தான் மந்திரியாரைப் பற்றியும் கொள்ளவேண்டியிருக்கிறது.

கல்வித் திட்டத்திலே உள்ள குணம்—குறைபாடுகளைக், கல்வித்துறை அதிகாரிகளைத் தவிர, வேறுயார் திறம்பட அறிந்து கூற முடியும்? அந்த உரிமையும் 'ஆகஸ்டு தியாகி'கள்வசமே தான் இருக்க வேண்டுமென்று கல்வி அமைச்சர் எண்ணுகிறாரோ என்னவோ!

காங்கிரஸ்அரசாங்கம் போடும் கல்வித் திட்டத்தால், இதுவரையில், காலமும், பொருளும் பாழான்தைத்தான் காண முடிகிறதேயல்லாமல், உருவான பலனேதும் ஏற்பட்டுள்ளதாகத்தெரியவில்லை. இதைக் கல்வி அதிகாரிகள் உணர்கிறார்கள் - அவர்களால் உணர முடிகிறது, எனவே திட்டத்திலுள்ள குறைபாடுகளை, அஞ்சி அஞ்சி, மெல்ல, மெல்ல எடுத்துக் கூறுகிறார்கள். கொஞ்சம் உரத்தக் குரலில் எடுத்துக் கூறினால், காங்கிரஸ் அரசாங்கத்தின் அதிகார பாணம் எங்கு வந்து பாய்ந்து விடுகிறதோஎன்று அஞ்சுகிறார்கள், எனவேதான் மெல்லிய குரலில் அவர்கள் கூறுகிறார்கள். அதுவே பொறுக்க முடியவில்லையாம் மந்திரி மாதவனரால், ஆகவே வருந்துகிறாராம்! காந்தியார் தம் போக்குக்கு ஏற்றபடி, தமக்குத் தோன்றியபடி வகுத்த வார்தா கல்வித்திட்டத்தில், காங்கிரஸ் அரசாங்கத்தினர்க்கு எவ்வளவு ஆர்வம் படிந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டிக்கொள்ள வேண்டுமானால், இப்போது கையாளப்படும் அடிப்படைக் கல்வித் திட்டம் பயன்படலாமேயொழிய, நாட்டிற்கும் மக்களுக்கும் உருவான பலனை அது ஒரு நாளும் ஏற்படுத்தப் போவதில்லை என்பது வெள்ளிடைமலையாகிவிட்டது. இவர்கள் கொள்ளும் அடிப்படைக் கல்வி நோக்கத்திற்கு, எத்துணையோ நூற்றாண்டுகள் முன்னேறியதாக வளர்ந்து விட்டதுஇன்றைய உலகியல்சூழ்நிலை. ஆகவே மூன்று ஆண்டுகள் அரசாங்கத்தினராலும், அதற்கு முன்புபல ஆண்டுகள் காங்கிரசினராலும் கையாளப்பட்டக் கல்வித் திட்டம், ஒரு சில 'தியாகி'களுக்கு வேலை தேடிக்கொடுக்கும் நிலையமாக மாறி நிற்க முடிந்ததேயல்லாமல், நாட்டிற்கு நலம் பயந்ததாக எதுவும் உருவாகத் தெரியவில்லை, ஒவ்வொரு தடவையும் கல்வித் திட்டம் தீட்டிக்கொண்டிருப்பதாகச் செய்தி கிடைத்து வருகிறதேயொழிய, தீட்டப்பட்டு, நடைமுறையில் வெற்றி பயந்துவிட்டதாகச் சொல்வதற்கு இல்லை,

இளம் மாணவர்களுக்கு எவ்வளவு மொழிகள் தேவை, எந்த மொழிகள் தேவை, எந்தந்த வயதிலிருந்து அவைகளைச் சொல்லிக் கொடுக்கலாம், என்பது பற்றிய உறுதியான திட்டம் இன்னமும் இந்த ஆளவந்தார்களால் நிலைநாட்ட முடியவில்லை! இந்த இலட்சணத்தில், திட்டத்திலுள்ள குறைபாடுகளைக் கல்வி அதிகாரிகள் சுட்டிக் காட்டுகிறார்களே என்று சினங்கொண்டு வருந்துகிறார் கல்வி அமைச்சர்.

இந்த ஆட்சியாளர்கள் வகுத்துள்ள பாடத் திட்டம், விஞ்ஞானம், வரலாறு, அரசியல், பொருளியல், சமுதாயம் பற்றிய பல்வேறு துறைகளின் முடிந்த முடிபான சில கருத்துக்களை, மேலிழந்த வாரியாக, நுனிப்புல் மேய்வதுபோல், மாணவர்கள் அறிந்துகொண்டு, வாழ்க்கையில் இறங் தும்படியான அளவில், அமைக்கப்பட்டிருக்கிறதேயொழிய, எந்த ஒரு துறையிலாவது அடிமுதல் நுனிவரை கற்றுய்ந்துகொள்ளும் முறையில் அமைக்கப்படவில்லை. இதனால் எதிர்காலத்தில் நாட்டின் பொது நலன் பாதிக்கப்பட்டு போய் விடும் என்ற உண்மையைக் கல்வி அதிகாரிகள் உணர்கிறார்கள், ஆகவே குறை கூறுகிறார்கள். இதில் என்ன தவறு!

காங்கிரஸ் ஆட்சியாளரின் பழைமைச் சார்புடைய வார்தாக் கல்வித் திட்டம் வலுக்கட்டாயமாகப் புகுத்தப்படுமேயானால், இந்த நாடு எதிர்காலத்தில் பிற நாடுகளில் சென்று, 'விஞ்ஞானப் பிச்சை' கேட்கும்படி ஏற்பட்டு விடும் என்பது உறுதி.

கல்வி அதிகாரிகள் கூறும்குறைபாடுகளைச், சீர்தூக்கிப் பார்த்து செம்மை நிலைகாண முன்வருவதுதான் கல்வி அமைச்சரின் சீரிய பண்பாக இருக்கவேண்டுமேயல்லாது, கல்வி அதிகாரிகள் குறை கூறுகிறார்களே என்று **'வருத்த வெண்பா'** பாடுவதில் கல்வி அமைச்சர் ஈடுபட்டால் அது அவருக்கும் நல்லதல்ல, மக்களுக்கும் நல்லதல்ல, நாட்டிற்கும் நல்லதல்ல! குறைபுணர்ந்து. குணஞ் செய்வதே ஏற்ற முறை! மந்திரி மாதவருக்கு ஏற வேண்டுமே இந்தப் பாடம்!

அங்கேயும் அப்படித்தான்!

ஜனநாயகம் பறிபோகும் பக்குவம நம இந்திய நாட்டில மட்டுமில்லை. இதனை அடுத்துள்ள பாக்கிஸதானுக்கும் இந்நோய் பரவிவிட்டது. மக்கள் உரிமையைப் பறிப்பதில் நாங்கள் இந்திய யூனியனுககுச் சளைத்தவர்களலல என்று காட்ட ஆரமபித்துவிட்டது பாக்கிஸ்தான் அரசாங்கம். பொதுஜன பாதுகாப்பு அவசரச் சட்டம் எனற பெயரில் மனித உரிமை பறிக்கப்படுகிறது. பாக்கிஸ்தான பிரஜா உரிமைச் சங்கம் சமீபததில் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில், மக்கள் ஜீவாதாரஉரிமைகளைக் காப்பதற்காக எல்லோரும் ஒன்றுபட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறது. மேலும் இச்சங்கம நவமபரில் மகாநாட்டைக் கூட்டும் என்றும் தெரிவிககிறது.

உலக்கூடம்

['சம்மட்டி']

குரல்பேதக் கூத்து!

"தண்டனை கிடையாது! கள்ள மார்க்கெட்டில் திரட்டிய பணத்துக்கு,சர்க்காருக்குச் சேரவேண்டிய வருமானவரிபகைக்கொடுத்துவிடுக! பணம் வந்த வகையைச் சொல்ல வேண்டாம்! இரக்கம் காட்டுங்கள்! இந்திய சர்க்காரைக் கை தூக்கி விடுங்கள்! அச்சந்தவிர்க! ஆபத்து நேரத்தில் அருந்துணை புரிக! அபயம் அபயம்! ஆப்தநண்பர்களே! அகமகிழ்வுடன் அஞ்சலி செய்கிறோம்!" சில நாளைக்கு முன் இத்தகைய அழுநால்-இல்லை-இல்லை-கனிவுரை, உங்கள் செவிகளிலே விழுந்ததே, அது நினைவிருக்கிறதா உங்களுக்கு? இருக்காதுதான்!

எவ்வளவோ தொல்லைகள்! தடும்பக்கவலைகள்! எங்கிருந்து இதுமாதிரி விஷயங்கள் எல்லாம் சாதாரண மக்களாகிய உங்களுக்கு ஞாயபகம் இருக்க முடியும்? அளவரிசிகாளுக்கு நாள் குறைத்து வருநிறதைப் பற்றிக் கவலை கொள்வீர்களா? வரவிற்கும் செலவிற்கும் சரிகட்ட முடியாமல் திண்டாடுவதைக் குறித்துக் கவலை கொள்ளுவீர்களா? பெற்றோர் தொல்லை—மனைவி தொல்லை—குழந்தைக் குட்டிகள் தொல்லை-இன்னும் என்ன என்னமோ எண்ணத் தொலையாதத்தொல்லைகளை, மனத்துக்குள்ளாகவே மூடி வைத்துக்கொண்டு கவலைப்பட்டுக் கொண்டிருப்பீர்களா? கவலையின் உருவங்களைக்காண வேண்டுமென்றால், இந்த'பாரத' பூமிக்குத் தானே வந்தாக வேண்டும்!

நாற்சந்தியில் நின்று, வருவோர் போவோரை, வழி மறித்து, 'ஐயா ஒரு காசு போடுங்க!' என்று பல்லெலாம் தெரியக் காட்டி, தழதழக்கும் குரலில கேட்டுக் கேட்டு, முகத்தில் அசடு வழிய, வெறுங்கையோடு நின்று, உயிர்வாழும் பாரத்தைத் தாங்க முடியாமல், தளர்ந்த நடையுடனும் கையில் தடியுடனும் காலங்கழித்து வருகிறாரே, அவரல்ல, மேலே எடுத்துக் காட்டியுள்ளது போல், நயநயப்பாகப் பேசிப் பிரலாபித்தவர்! அவர்தானைய்யா, பண்டிதர். சமதர்மச் சூராவளி, ஆசிய ஜோதி, இந்திய அதிகாரத்தின் இருப்பிடமும் பிறப்பிடமும்! பிச்சைக்காரனின்கெஞ்சலுக்குப் பரிந்துகொண்டு யாராவது, 'பாக்கெட்'டில் கையைப் போட்டு, வாரி வீசுவார்களா பிச்சைக்காரன் முகத்தில் பணத்தை? ஒரு செல்லாக் காசாவது இன்சொல் சுருணைக்குள் வைத்து எறிபவருண்டா? கிடையவே கிடையாது! கொடுக்கிறவர்கள் கூட, "பீடை! தரித்திரம்! இவன் தொல்லையே பெரிசா இருக்கு! எங்கையாவது போய் தூக்கிட்டு சாகண்டா! கிணறு குட்டை பார்த்து விழண்டா! ஏண்டா எங்கப் பிராணனை வாங்கித் தொலைக்கிற?" என்று ஆசீர்வாதம் செய்துவிட்டுத்தான், பைசா துட்டைத் திரும்பத் திரும்பப் பார்த்து விட்டு, பிச்சைக்காரனிடம்போடுவார்கள். காசு கொடுக்காமல. ஆசிர்வாதத்தை மட்டும் அனுப்பிவிட்டுப் போகிற புண்ணியவான்களும் உண்டு. "பிளடி! நான் சென்ஸ்! பெக்கர் பெலோ!" என்று, ஏழையை எட்டி உதைத்துவிட்டு, சுற்றி நிற்பவர்களை ஒரு முறை ஏற இறங்கப் பார்த்துவிட்டு, பாதை வழியே பாம திருப்தியோடு போகிற மகானுபாவர்களும் உண்டு!

பஞ்சையின் குரலிலே கம்பீரம் இல்லாத காரணத்தால்தான், அவனைப் பார்க்கிறவர்களெல்லாம், அவனை ஒரு பரிகாசத்துக்குரிய ஜீவனுள்ளச் சிலையாகக் கருதுகிறார்கள்! கேலி, கிண்டல், கண்டனம், கைவரிசை இவ்வளவிற்கும் அவன் இலக்காகிறான்! அமாவாசை இருட்டில், கன்னக்கோலும் கையுமாகக் கனக மாளிகையில் புகுந்துக், களவாடும் பொழுது, மாளிகைக்குடையார் விழித்துக் கொண்டால், தொண்டையைக் கனைத்து ஊட்டி மிரட்டி காசு பறிக்கிறானே களவாணி, பார்த்தீர்களா, அவன் சொல்லுக்குள்ள கம்பீரத்தின் மகததுவத்தை! பொருள் படைத்தவருக்கு அச்சத்தையும் நடுக்கத்தையும் கொடுக்கும்சக்தி அவன் வார்த்தைகளில் எவவளவு இருக்கிறது பார்த்தீர்களா? உயிருக்குப் பயந்தல்லவோ கன்னக்கோலனுக்குப்பணிந்து,பாதகாணிக்கையாகச்செலுத்துகிறார்கள் பொன்னையும் பொருளையும்! கள்வனின் குரலிலும் பஞ்சைக்கிருப்பது போன்ற மென்மை இருந்தால், கள்வனின் தொழிலில் வெற்றிகிட்டுமா? கள்வனுக்குத்தான் வேறு தொல்லை சம்பவிக்காமல் இருக்க முடியுமா?

ஆனால், கனத்தக் குரல் எடுத்துப் பேச வேண்டிய அதிகாரத்தில் இருப்பவர், பஞ்சையின் இரவல் குரலில் பேசப் புறப்பட்டது விசித்திரமானதுதான்! அதைக் காட்டிலும் விசித்திரமானது, பஞ்சைபோல் பயந்து பார்த்துத் திக்கித்திக்கிப் பேச வேண்டிய கள்ள மார்க்கெட்டுக்காரர்கள், கன்னக் கோலனின் கனத்தக் குரலை இரவல் வாங்கிக் கொண்டு பேசப் புறப்பட்டிருப்பதுதான்!

"அந்தப் பணம் எப்படி கிடைத்தது? அதற்கு எந்த வகையில் சொந்தம் பாராட்டுகிறீர்கள்?" என்றெல்லாம் கள்ள மார்க்கெட்டுக்காரர்களைக் கேட்காமல் இருந்தால், பதுங்கிக்கிடக்கும் பணம், வெளியில் நர்த்தனமாடும் என்று நாவசைககிறார் ஒரு நல்லவர்! "வரி விதிப்பதில்லை என்று வாக்குறுதி கொடுத்து, இரண்டு சதவிகிதம் வட்டியும் தருவதாகக் கை போட்டுக் கொடுத்தால், கண்டிப்பாக வெளியில் வர வெட்கப்பட்டுக்கொண்டிருக்கும் வெள்ளைப்பணம், உருண்டோடி வந்து சர்க்கார் கஜானாக்களில் புகுந்துக்கொள்ளுமென்று திட்டம் தீட்டுகிறார், அதே நல்லவர்!

கள்ளமார்க்கெட்டைக் கனவிலும் தீண்டியறியாதவரோ, இவ்வாறு பேசும் ஆர்பாட்டக்காரராக இருக்கும்போது, உண்மையானக் கள்ளமார்க்கெட்டுக் கழுதுகளின் குரல எவ்வளவு நாப்பறையாக இருக்கும் என்பதைக் கூட்டிப் பார்த்துக் கொள்ளுங்கள்! நாளை சொல்லுகிறேன், கள்ளமார்க்கெட்காரர்கள் எந்தக்கட்சியில் ஏராளமாக இருக்கிறார்கள் என்பதை!

யார் குற்றவாளிகள்? :: :: யார் நிரபராதிகள்?

எவர்சொல்லைக்கேட்டதால்இந்தஅவதி?

நெருக்கடி நீங்க மார்க்கமில்லையா?

“நாட்டு உரிமைக்காகப் பெரும் கிளர்ச்சி நடத்தும் வேலை இனி இல்லை. அதற்குரிய தேவையும் உரிமை கிடைத்த அன்றே முடிந்து விட்டது. இப்போது அதற்கு அவசியம் இல்லை.

“எனவே, நாட்டாட்சியில் பங்கு கொண்டுள்ள-போரிட்டுரிமை பெற வல்ல-கிளர்ச்சி நடத்தவல்ல அரசியல் வாதிகள் இனித்தேவையே யில்லை.

“சமுதாயத்தை-நாட்டை-பொருளாதாரத்துறையில் மறுமலர்ச்சி யடையச் செய்யவேண்டுமானால், வளம்பெறச் செய்ய வேண்டுமானல் நாட்டிலுள்ள கைத்தொழில் துறை வல்லார்; வர்த்தகத்துறைவல்லார் ஆகியோரின் ஆலோசனைகளையும் தீவிர ஒத்துழைப்பையும் பெற்று ஆட்சி நடத்தும் மனப்பண்புடையவர்கள் ஆட்சிப்பீடத்தில் அமர வேண்டும்.

“நாட்டிலே கட்டுப்பாடு (கண்ட்ரோல்) கொண்டுவருவதும், அதை நீக்குவதும், மீண்டும் கொண்டுவருவதுமான நிலையிருக்கிறதென்றால்.

இது விந்தையாகவும் கேவலமாகவும் இல்லையா? கட்டுப்பாடு நீக்கப்பட்டால் விலைவாசிகள் ஒரே யடியாக உயர்ந்து, பிறகு பொருள்களே கிடைக்காமற் போய் விடுகின்றன. எனவே, அரிசி போன்ற இன்றியமையா முக்கியத்துவம் வாய்ந்த பொருள்களைக் கட்டுப் பாட்டில் கொண்டுவந்து, மற்றவற்றின் கட்டுப் பாட்டை நீக்கி, கள்ள மார்க்கட் காரர்கள், பதுக்கல்காரர்களைத் தயை தாட்சணியமின்றித் தண்டித்து, நடவடிக்கை எடுத்துக் கொண்டால நிலைமை எவ்வளவோ சீரடைந்து விடுமே”

இவ்வாறெல்லாம் கூறியிருப்பது பெருத்த வியாபாரச்சிமானும், காங்கிரஸ் தூண்களுள் ஒருவருமான ஏ. பி. சி. வீரபாகு அவர்களே

காங்கிரஸ் கட்சியினர் வெறும கட்சிப்பற்று ஒன்றை மட்டும் கொண்டு, நாட்டாட்சியில் அக்கரையின்றி, நாட்டு நிலைமையைச் சீர் கேட்டுக்குள்ளாக்குகின்றார்கள் என்பது தோழர் வீரபாகு அவர்களுடைய கருத்து

தொழில் துறை. வர்த்தகத்துறை நிபுணர்களைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்னும எண்ணம் கடுகளவு மின்றி, எல்லாம் தங்களுக்குத் தெரியும் என்ற மனப்பான்மையுடன் செயலாற்றும் காங்கிரஸ் கட்சியினா ஆட்சி, திறம்பட, மக்களுக்கு நலன்தர ந-க்கும் ஆட்சியாக இருக்க முடியாதென்பதை, தோழர் வீரபாடு எடுத்துக் காட்டுகிறா. உரிமைபெறக் கிளர்ச்சி செய்த தலைவர்களின் வேலை முடிந்து விட்டபடியால், அவர்கள் இனி ஆட்சிப் பொறுப்பேற்று நடத்தும் வேலையைக் கவனிக்காமல், அதை நடத்தும் திறமையாளர்களிடம் ஒப்படைக்க வேண்டுமென்கிறார் தோழா வீரபாகு.

ஆனால் இன்று நடை பெறுவதென்ன? காங்கிரஸ்காரர்கள் ஆட்சி புரிகின்றனர்; நாட்டிலே மக்கள் நன்மை பெற முடியவில்லை பல துன்பங்களுக்கு ஆளாகி அல்லற் பட்டுக் கொண்டிருக்கின்றனர். ஆட்சி புரிவோர் பல நல்ல செயல்களைச் செய்யப் பணம் இல்லாமல் திண்டாடுகின்றனர். ஆனாலுங்கூட இத்தகையசிக்கலான நிலைமைகளைச் சமாளித்து நாட்டின் நிலையை, மக்களின் வாழக்கை அந்தஸ்தை உயர்த்தக்கூடிய வழிகளைக் காணக் காங்கிரஸ்காரர்களுக்கு மனத் துணிவில்லை ஏன்?

“எங்கள் ஆலோசனைகள் ஏற்றுக் கொள்ளப்படுமானால், எப்போதும் நாங்கள் அரசாங்கத்துக்கு உதவி செய்ய ஆயத்தமாயுள்ளோம். பல நிபுணர் கமிட்டிகள் அமைக்கப்பட்டன. என்போன்ற நிபுணர்கள் பலர் அவற்றில் நியமிக்கப்பட்டனர். நாங்கள் தீர ஆலோசித்துப் பல நல்ல ஆலோசனைகளைக் கூறினோம். ஆனால் அவையனைத்தும் அசட்டை செய்யப்பட்டன. எனவே, எங்கள் ஆலோசனை தேவையற்றுப்போகையில் நாஙகளே முன் வந்து ஆலோசனைகளைக் கூறிக் கொண்டிருப்பானேன்? காங்கிரஸ் கட்சிக்காரர்களை விட நாஙகள் தேசபக்தியில் மிகுந்தவர்களே யாவோம் எஙகள் நாட்டுக் குழைப்பதில் நாஙகள் பெரு மகிழ்வும பெருமையும் அடைகிறோம. ஆனால் எஙகள் உழைப்பு மதிக்கப்பட வேண்டுமே!”

என்று கூறியுள்ளார் எஸ். அனந்தராமகிருஷ்ணன்.

இவற்றிலிருந்து, உண்மையிலேயே காஙகிரஸ்காரர்கள் எந்த நிலையில் ஆட்சி செய்கின்றனர் என்பதும் அவர்களுடைய போக்கு எத்தகையது என்பதும் பொது மக்களுக்குத் தெளிவாகத் தெரிய முடியாது.

காஙகிரஸ்காரர்கள் தங்கள் சுயேச்சையின்படி ஆட்சி நடத்துவதாகவே, பொதுமக்கள் எண்ணிக் கொள்ளக் கூடியவாறு, தோழர் வீரபாகுவும் அனந்தராமகிருஷ்ணனும பேசியுள்ளார்கள. ஆனால் உண்மை நிலை என்ன?

காஙகிரஸ்காரர்கள் இன்று முதலாளிகளின் கைப்பதுமைகளாயிருக்கின்றனர். பிாலா, டாட்டா, ஸ்ரீராம்கள் ஆட்டுவிக்கும் பொம்மைகளாகவே காஙகிரஸ்காரர்கள் ஆட்சி புரிகின்றனர். காஙகிரஸ்காரர்கள் ஆடசிபபீடம் ஏறியபோது, மக்கள் தஙகள் தலைவர்கள் ஆடசிபபொறுப் பேற்பதால் நாட்டுக்கும், தஙகளுக்கும நலன்விளையுமென்று கருதினர்கள். ஆனால், அந்தத தலைவாகள, முதலாளிகளின் விருப்பபபடி ஆடுபவாகளாகஆகிவிட்டபடியால்தான, நாடடிலே இன்று இவ்வளவு தொல்லைகளும் சஙகடஙகளும், ஏழை மக்களைபபற்றிய அக்கரைசற்றுமில்லாத ஆட்சியும நடை பெறுகின்றது. இந்த அளவுகூட நடை பெறுவதை விரும்பாத தோழர் அனந்தராமகிருஷ்ணாகளும, வீரபாகுகளும அரசாஙகம் அடியோடு முதலாளிகளிடம் வந்துவிடவேண்டும. என்ற நோக்கத்துடனேயே மேற்கண்டவாறு பேசியுளளாாகள்.

காஙகிரஸகாராகள தஙகளால் ஆட்சிநடத்தமுடியாவிடில், ஆட்சிப பொறுபபைவிட்டு வெளியேறி இருக்க வேண்டும. ஆனால் அப்படிச் செயய மனம் வராமல, முதலாளிகளிடம் சரணாகதி யடைந்து, அவாகளுடைய ஆடகளாயிருந்து ஆடசி செய்வதால் பொது மக்கள் ஏமாற்றமடைய நேரிடுகிறது.

பொது மக்கள் தஙகள் தலைவர்களுடைய அரசாஙகம் நடக்கிறதென நம்பி ஏமாறச் செயவதை விட, இவர்கள் வெளியேறி முதலாளிகளிடமே ஆட்சிபபொறுப்பை ஒபபடைத்து விட்டால், பொது மககள ஆட்சியை நடத்துவது யாரென்பதைத் தெளிவாகஅறிந்து கொளவார்கள. தஙகள் வாழ்வு நலனுக்காக முயறசி செய்வாாகள். ஆனால் அம முயற்சிக்கு இன்று தடையாக இருபபவர்கள் காஙகிரஸ் காராகளே. இதைக் காஙகிரஸ்காரர்கள உணர்ந்து நடந்து கொள்ளும துணிவு பெறுவாாகளா? ஆட்சியை விட்டு வெளியேற இவர்களுக்கு மனம் வருமா? நாட்டாட்சியின் உண்மை நிலையை மக்கள் அறிந்து கொள்ளுமாறு செய்யும் துணிவு இவர்களுக்கு இருக்கிறதா?

வகுப்பு வெறி வளர்வது யாரால்?

திராவிடர்கள் வகுப்புத் துவேஷத்தை வளர்த்து வருவதாகவும், சாதி-வகுப்பு வேற்றுமை அரக்கனைத் திராவிடர்கள் கொல்ல வேண்டும். இல்லையேல் அவ்வரக்கன் அவர்களை அடியோடு விழுங்கிவிடும் என்றெல்லாம் தோழர் காமராசர் கூறியுள்ளார் பெத்து நாய்க்கன் பேட்டையில்.

உண்மையில் நாட்டில் வகுப்பு வெறியை வளர்ப்பது யார் என்பதைத் தோழர் காமராசர் உணர விரும்பினால், உணர்ந்திருந்தால், உண்மையை உரைக்க மனமிருந்தால், வகுப்புவெறியர்கள் யாரென்பது அவருக்குப் புரிந்துவிட்டிருக்கும்.

நாட்டிலே சாதிகளே இருக்கக் கூடாது என்பவர்கள் வகுப்புத் துவேஷிகளா? அல்லது அன்றாட வாழ்க்கையிலே, நடையுடை பாவனையிலே, பழகும் முறையிலே சமுதாய அமைப்பிலே உயர்வு தாழ்வுகளை நடை முறையில் கையாண்டு, சாதிப் பிரிவுகளை வற்புறுத்தி; அவை சம்பந்தமான தத்துவங்களை மக்கள் மனத்திலே மதத்தின்பேராலும் கடவுள் பேராலும் என்றும் அழிக்க முடியாதவாறு அழுத்தி வைத்துக்கொண்டே இருப்பவர்கள் வகுப்புத் துவேஷிகளா? யார் உண்மையில் வகுப்புத்துவேஷிகள்.

சாதிப்பிரிவினையை வற்புறுத்தும் மக்களையும், தத்துவங்களையும், கொள்கைகளையும் கண்டிப்பது வகுப்புத்துவேஷமா? அதைக் கண்டிப்பது வகுப்புத்துவேஷமா?

மனத்தைக்கட்சி வெறி, மக்களை மயக்கிக் கட்சிக்குப் பலம் சேர்க்க முயல்வது என்ற எண்ணங்களில், லாமல் சுத்தப்படுத்திக் கொண்டு தோழர் காமராசர் சிந்தித்துப் பார்த்தால், வகுப்புத்துவேஷ அரக்கன் எங்குள்ளான் என்பது விளங்கும். உண்மையில் நாட்டு நலத்தில் பொதுமக்கள் உயர்வில், தோழர் காமராசருக்கு ஆர்வமிருந்தால் அவர் உண்மையை உணர்ந்து, வகுப்பு வெறியை ஒட்டும்வேலை வேறிடத்தில் இருப்பதையும், அதை ஒட்டவே திராவிட மக்கள் முயற்சி செய்து வருகின்றனரென்பதையும் உணர்வார்.

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு மாலைமணி' விற்பனை செய்ப முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.

(1) தச்சநல்லூர்.
(2) கீவளூர்,
(3) கடலூர்,
(4) முசிரி,
(5) திருமலைராயன் பட்டணம்
(6) செம்மனூர்கோயில்
(7) மங்கநல்லூர்,
(8) பாப்பா நாடு,
(9) நன்னிலம்,
(10) ஜோலார் பேட்டை,
(11) பரங்கிபேட்டை.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

26-10-49

சத்தியமங்கலம் (தெ. ஆ.) :— என். வி. நடராசன்

தேனி:— ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எஸ், உத்தண்டன்

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

———(0)———

திராவிட மாணவர் இயக்கம் சென்ற ஐந்து. ஆறு ஆண்டுகளில் மாணவர் உலகத்தில் நல்ல வளர்ச்சியைப் பெற்றிருக்கிறது. பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள், உயர்நிலைப்பள்ளிகள் ஆகிய எல்லா அறிவாலயங்களிலும் நமது குரல் கேட்காத இடமில்லை. கோடை விடுமுறைகளில், கடந்த பல ஆண்டுகளில் நாடு, நகரம், பட்டி: தொட்டிகளிலெல்லாம நாம் செய்த நல்லறிவுப் பிரசாரம் எந்த நாட்டு மாணவர் வரலாற்றிலும் இல்லாத தனிச் சிறப்பு. அழுகிப்போன பழம் சம்பிரதாயங்களாலும, மூடநம்பிககைகளாலும் புரையோடிப் போயிருக்கும் நமது சமுதாயத்தின் புண்ணைக் கீறி. ஆற்றி, பகுத்தறிவு மணங்கமழும புது வாழ்வு மேற்கொள்ளும சமுதாயமாக உருவாக்கும் சிற்பிகளாய் இருந்திருக்கிறோம. திராவிட மொழி, கலை, நாகரிகம், பண்பாடு, வரலாறு ஆகியவைகளை வீழ்ச்சியுற்ற இனத்திற்கு எடுத்து. இயம்பி எழுச்சி யூட்டியமறுமலர்ச்சியின் தூதர்களாக இருந்திருக்கிறோம். “பொது வாழ்வு புனிதமானது” என்ற இலட்சிய கீதத்தைக் காட்டி நாட்டின் நலிபோக்க உழைக்கும் ஒப்பற்ற நல்ல பல பேச்சாளர்கள்: எழுத்தாளர்கள், உழைப்பாளிகள் ஆகியோரைத் தயாரித்துத் தந்திருககிறோம். திராவிட மாணவர்களின் நியாயமான உரிமைகளுககுப் போராடுவதில் நமமுடைய கூட்டுச் சக்தியின் வலிமையை வெளிப்படுத்தியுள்ளோம. நம மீது வீசப்பட்ட அடக்கு முறைகள், தடைகள், தொல்லைகள் யாவற்றையும் வெற்றிகரமாக சமாளித்துள்ளோம. இததகு செயலகளைச் சாதிகக, திராவிட மாணவர் கழகம் என்ற பெயரிலே ஓர் அமைப்பை ஏற்படுத்திககொண்டு தொண்டு புரிந்து வந்திருக்கிறோம்.

கடந்த மூன்றுமாத காலமாக நமது தொண்டுக்குத் தேக்க நிலை ஏறபட்டது. பெரியாரின் திருமண ஏற்பாடு என்ற துயரச் சேதி கேட்டு நமமிலே மிகப் பலர், கொள்கையை கேலிக் கூத்தாக்கிய பெரியாரின் தலைமையை ஏற்றுககொள்வதற்கில்லை என்ற கருத்தை “கண்ணீர் துளிகள்” மூலம் தெரிவிததிருக்கிறோம. நமபோன்ற நிலையே திராவிட கழகத்தைச சேர்ந்த மிகப் பெரும் பாலோர்க்கு ஏற்பட்டது. இநத நெருக்கடியிலிருந்து வெளிவந்து திராவிட முன்னேற்றக் கழகம என்ற அமைப்பின் கீழ் பணியாற்றத் தொடங்கியுள்ளனர். இந்த நிலையில் நமது எதிர்காலததைப் பற்றி சிந்திகக வேண்டிய நிர்ப்பந்தம ஏற்பட்டது. என்வே திராவிட மாணவர் இயகக முன்னணியினர் பலரையும் கலநதுயோசித்தேன். நமது புதிய நிலைககேற்ப, “திராவிட மாணவர் முன்னேறறக் கழகம்” என்ற பெயரிலே புதிதாக அமைப்பை ஏற்படுததி திராவிட முன்னேற்றக் கழகத்தை அரசியல் ஆசானாகக் கொண்டு பணியாற்றுவது என்று ஒருமித்த கருத்தை வெளியிட்டார்கள். ஆகவே நமது கருத்தை ஆதரிக்கும் மாணவத் தோழர்களைத் திரட்டி “திராவிட மாணவர் முன்னேற்றக கழகக் கிளைகள்” அமைக்குமாறு ஆர்வ முள்ளவர்களை வேண்டுகின்றேன. ஏற்கெனவே சில இடங்களில் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகக் கிளைகள் மலர்ந்துள்ளன. அவைகளுக்கு எனதுமகிழ்ச்சி; பாராட்டுதல். கிளைக் கழகங்கள் நிறுவி செயலாளர், துணைச்செயலாளா, பொருளாளர், விளமபர உறுப்பினர், செயற்குழு உறுப்பினர்கள் ஆகியோர் தேர்ந்தெடுத்து, நிகழ்ச்சியை இரண்டு பிரதிகள் எடுத்து, ஒன்றை “மாலைமணி”க்கும், மற்றதை எனது முகவரிக்கும அனுப்பிவைக்கக் கோருகிறேன. நவம்பா, டிசமபர் மாதங்களுக்குள் கிளைக்கழகங்களை நிறுவும வேலை முடிய வேண்டும். ஜனவரியில் கிளைககழகங்களைக் கொண்டு மததிய அமைப்பு ஏற்படுத்தவும், அதற்குரிய அலுவலாளர்கள் தேர்ந்தெடுககவும், வேலைத் திட்டம் வகுக்கவும், மாகாண மாணவர் மாநாடு கூட்டுவதற்கான முயற்சி நடைபெற்றுக் கொண்டு இருககிறது. ஆகவே எல்லாக் கல்லூரி, உயாநிலைப்பள்ளி, மாணவாகளையும் விரைவில் அந்தநத இடஙகளில கிளைகளை நிறுவுமாறு மீண்டும் அழைக்கிறேன்.

நமமுன்னே உள்ள பிரச்சினைகள் மிகபபல. நல்ல கல்வித் திட்டத்தை உருவாககுவது, தாயமொழிக்குத் தகுந்த இடத்தைப பெறறுததருவது, கல்வி நிலையங்களிலே திராவிட மாணவரின உரிய பஙகைப் பெற்றுத்தருவது, திராவிட நாகரிகததின் மேம்பாட்டிறகு உழைபபது போனற பல பணிகள் நம்மால செய்யபபட வேண்டியவை. நமது கடந்த கால சாதனைகள் நமபிக்கையையும் உற்சாகத்தையும்கொடுக்கிறது. அதே நேரத்தில் எதிர்காலத்தில் நாம் செய்ய வேண்டிய கடமைகள் மகத்தானது இவைகளுக்காக திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தின் கீழ் திரளவேண்டும். அந்த அணி வகுப்பிலே பஙகுகொள்ள எல்லாத் திராவிட மாணவர்களையும அழைக்கிறேன்.

கே. ஏ. மதியழகன்
அமைப்பாளர்,
திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

தனித் திராவிடம் காண்பதே இலட்சியம்

தமிழரும் — மலையாளிகளும் இணைந்து வாழ இயலும்

கேரளத் தலைநகரில் அன்பழகன்

திருவனந்தபுரம், அக். 17— 16—10—49 மாலை 4½ மணிக்கு — இங்கர் விக்டா ஜூபிலி டவுன் ஹாலில் பெருந்திரளான மக்கள் முன்னிலையில், தி. மு. கழகத் துவக்க விழா மிகச் சிறப்பாக துவங்கப் பெற்றது. முதல் நாள்— வெளிவந்த மலையாளப் பத்திரிகைகளிலும் விளம்பரம் செய்யப்பட்டிருந்ததாலும், 'திராவிடர்' என்ற பெயரையே புரிந்துகொள்ளாத சிலர், முக்கியத் தெருக்களிலும் மூலைகளிலும், 'திராவிடர் ஒழிக' கடவுள் இல்லை என்னும் கயவர் ஒழிக' என்றும் எழுதி இருந்தாலும், வியப்புற மக்கள் மலையாளிகள் உட்பட, மண்டபத்திற்கும் உள்ளும் வெளியும், சாலையிலும் நிறைந்திருந்தனர். விழாத் துவக்கத்தில் — இளைஞர் அப்பு அவர்கள் புரட்சிக்கவி பாரதிதாசனின் பாடல்கள் சிலவற்றைப் பாடி, இறுதியில் திராவிட நாட்டுப்பண்ணை, மிக இனிமையாகப் பாடினார். தோழர் சா. வீ. மு. நம்பி அவர்கள், தி. மு. கழகத்தின் கொள்கைகளை விளக்கி, தோழர்கள் அன்பழகன், கி. மனோகரன் ஆகியோரையும் கூடியிருந்தோரையும் வரவேற்று தோழர் எஸ். வி. மணி அவர்களைத் தலைமை ஏற்று நடத்தித் தரக் கேட்டுக் கொண்டார்.

வி. எஸ். மணி

தலைவர் தமது முன்னுரையில், தி. மு. கழகம் தமிழர்களுக்கு மட்டுமே உரியது என்று எண்ணிவிட வேண்டாமெனவும், மலையாளிகளுக்கும், கன்னடர்க்கும், தெலுங்கர்க்கும், பொதுவாகத் தென்னாட்டவர் யாவர்க்குமே உரியது எனவும், அதன் 'கொள்கைகளைத்' திருவனந்தபுரம் மக்கள் அறிந்து கொள்ளும் நல்வாய்ப்பு இன்று கிடைத்துள்ளதென்றும் கூறினார்.

ஜனார்த்தனம்

அடுத்துப் பேசிய, தோழர் ஜனார்த்தனம் அவர்கள், மலையாளத்திலேயே பேசுகையில், தி. மு. கழகத்தின்—கொள்கைகள், ஒரு மொழி பேசுவோருக்கு மட்டும் அல்ல—திராவிட இனத்தைச் சேர்ந்த அனைவருக்குமே உரியது எனவும், தென்னாட்டின்; ஒரு பெரும் சமூக சீர்திருத்த இயக்கமே இக்கழகம் என்றும், 'கடவுள் இல்லை' என்றோ, 'நாஸ்திகத்தை' ஒப்புக் கொள்ளும்படியோ இக்கழகம் கூறவில்லையெனவும்—விளக்கிப் பேசினார்.

கி. மனோகரன்

பின்னர், தோழர் கி. மனோகரன் (நாகர்கோவில்) அவர்கள் தாம் ஒரு மலையாளியே எனவும் தம் தாய்மொழி மலையாளம், எனப்புத் தாய்மொழி தமிழ். எனவே, தாம் தமிழில் பேசுவதாகக் கூறித், தி.மு. கழகம், மக்களின் அறியாமையைப் போக்கி, மூட நம்பிக்கைகளை ஒழித்து, மதப் புரட்டுக்களை நீக்கி, ஜாதி உயர்வு தாழ்வு எண்ணங்களை எரித்து, மக்களை ஒன்றே குலம் என்ற எண்ணத்தோடு வாழச் செய்வதற்கே பாடுபடுகிறதென்றும், கடவுள் பெயரால், நடைபெறும் பித்தலாட்டங்களையும், புரோகிதர்களின் சூழ்ச்சிகளையும், உயர் ஜாதிக்காரர்களின் ஆதிக்க உணர்ச்சியையும் விளக்கிக்காட்டுவது எப்படித் தவறாகுமென்றும், இதனால் பாதிக்கப்படக்கூடிய சுயநலமிகள், வேண்டுமென்றே— எங்களிடத்திலே வெறுப்பூட்டுவதற்காகச் சொல்லும் வார்த்தைகளைப் பொது மக்கள் நம்பிவிடக் கூடாதென்றும், எங்களது கருத்துக்களைக் கேட்டுப்பின் சிந்தித்துப் பார்த்து, அதற்குப்பின் முடிவிற்கு வர வேண்டும் என்றும் கூறி விரிவானதொரு சொற்பொழிவாற்றினார்.

க. அன்பழகன்

இறுதியில் பேசிய தோழர் க. அன்பழகன் அவர்கள், திருவனந்தபுரத்தில் இதற்கு முன் திராவிடர் கழகக்கூட்டமே நடைபெறுதிருந்தும்கூட, பல தோழர்கள் கழகத்திலே பற்றுகொண்டிருந்தும், அவர்களெல்லாம், ஒன்று கூடித் தி. மு. கழகத்தைத் துவக்கிப் பணியாற்ற முன் வந்திருப்பது பாராட்டத் தக்கதெனவும், இந்த விழாவிற்கு, இவ்வளவு மக்களும் வந்து சேரக் காரணமாகத், தெருக்களிலேயெல்லாம் 'தி. மு. கழகம் ஒழிக' என எழுதிய தோழர்களுக்கு நன்றி உரைத்தெனவும், கழகம், இது வரையில் தமிழ் நாட்டில் மட்டுமே பணியாற்றி வந்துள்ள போதிலும், அதன் நோக்கத்தில் மலையாளமட்டுமன்றி, தென்னாடு திராவிடம் முழுவதும் அடங்குமெனவும், அதன் கொள்கைகள் திராவிடர்கள் எல்லோருக்குமே உரியதெனவும், 'திராவிடர்கள்' என்று கூறிக்கொள்வது— அவமானம், இழிவு என்று கருதுவதும், கூறுவதும், வரலாறு (சரித்திரம்) அறியாததன் விளைவே என்றும், சரித்திரப் பேராசிரியர்களும், மொழி நூல் அறிஞர்களும், வேறு பல துறைகளில் ஈடுபட்ட ஆராய்ச்சியாளர்களும், வடநாட்டு அரசியல் தலைவர்களுங்கூட, தென்னாட்டு மக்களைத் திராவிடர்களெனவும், தென்னாட்டு மொழிகளைத் திராவிட மொழிகளெனவும், நாகரீகத்தையும் கலையையும், திராவிடக் கலை நாகரீகம் என்று கூறியும் குறிப்பிட்டும் வந்துள்ளார்கள், எனப் பலப்பல ஆதாரவுகளை எடுத்துக் காட்டித் தெளிவுபடுத்தினார்.

'திராவிடர்' என ஏன் அழைக்கிறோம்?

தொடர்ந்து அவர் பேசியதாவது:—"மடமை-நாலாயிரம் ஜாதியாகப் பிளவுபடுத்தி, நாற்பதனாயிரம் வேற்றுமைகளை வளர்த்துக்கொண்டு—நாளடைவில் நலிந்து-நாட்டினையும் நாசமாக்க-நாமும் அழியக் காரணமான இந்துமதப் 'பாதையிலிருந்தும், அதன் புராண இதிகாசப் புளுகுகளிலிருந்தும், கண்மூடிப் பழக்க வழக்கங்களிலிருந்தும் நம் மக்களை விடுவிக்கவும், சமத்துவம், சகோதரத்துவம், சுதந்திரம் ஆகிய பண்பாடுகள் வளர்ந்து, ஒன்றுபட்ட ஒரு சமுதாயத்தினராக வாழவுமே நாம் நமது இனத்தின் பெயரால், 'திராவிடர்' என்று அழைத்துக் கொள்வது அவசியமாகிறது.

நாஞ்சில் நாட்டுப் பிரச்சினை

மேலும், தென்னாட்டில் வாழும் மக்கள்—மொழியினால் சிறிதளவு வேறுபட்டிருந்தாலும், முரண்பட்டவர்களல்ல. தி. மு. கழகம், தமிழர்களால், நடத்தப்பட்டாலும், மலையாளிகளை மாற்றார் என்று எண்ணுவதுமல்ல, ஆதிக்கம் செலுத்த வழி தேடுவதுமல்ல. ஆனால், அவரவர்களுக்கு இருக்க வேண்டிய நியாயமான உரிமைகளை, எவருடைய எதிர்ப்பிற்காகவும் அஞ்சி விட்டுவிடுவதுமல்ல. சென்னை மாகாணத்தின் மேற்குக் கரையில் உள்ள மலையாளப் பகுதி, ஐக்கிய கேரளத்தில் சேருவதை எவ்வளவு நியாயமும் அவசியமுமானது என்று நாங்கள் கருதுகிறோமோ, அப்படித்தான்-நாஞ்சில்-நாட்டுத் தமிழர்களும்-தங்கள் விருப்பப்படி, தமிழ் நாட்டில் சேர்ந்துகொள்ள உரிமையளிக்கப்பட வேண்டுமென்றே நாங்கள் கருதுகிறோம். நாஞ்சில் நாடு, கைவிட்டுப்போய் விடுமேயானால், உணவுப்பொருள் கிடைக்காது போய் விடும் என்று மலையாளிகளில் சிலர் சொல்லுவதாக நான் கேள்விப்படுகிறேன். உண்மையில் உலகப்போக்கை உணர்ந்தால், அத்தகைய கவலை ஏற்பட இடமே இல்லை. எங்கே உள்ள உணவுப் பொருளும், உணவுப்பொருள் இல்லாத பகுதியை நோக்கி விரைந்தே ஆகவேண்டும். உலகம் வாழவேண்டுமானால். இன்று கூட இந்தியாவிற்கு, ஆஸ்திரேலியாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும், கோதுமையும் பிறவும் வந்து கொண்டுள்ளது. எதைக் காட்டுகிறது? இரண்டும் ஓரே நாடானால்தான், உணவு கிடைக்கும் என்பதையா காட்டுகிறது? உண்மையில் எளிய வாழ்க்கையிலே தோய்ந்து, உழைப்பிற்கஞ்சாத மலையாளிகளோ, வஞ்சகமற்றுப் பாடுபட மனமும், பண்பட்ட நிலமும் கொண்ட தமிழர்களோ, இந்த அடிப்படை உரிமைகளை மறந்து, பகை எண்ணம் கொள்வது மிக மிகத் தவறாகும்.

நமது கடமை

மலையாளத்திலே— நெல்விளையாவிடினும்—தேங்காய் குவியாமலில்லை—தமிழகத்திலே—விளையும் நெல்லும், இங்கு கிடைக்கும் தேங்காயும்— ஒன்றுக்கொன்று மாற்றுப் பொருளாக முடியும் என்பதை அறிந்த யாரும்-இத்தகைய கவலைகொள்ளத் தேவை இல்லை. உண்மையில் மலையாளிகளும் தமிழர்களும்-மற்ற தென்னாட்டவரும் ஓரே விதமான, மிகச் சிறிதளவே வேறுபட்ட வாழ்க்கையினை உடையவர்கள். நமக்குள் ஒருவரை ஒருவர் சுரண்டவில்லை. ஏமாற்றவில்லை. மலையாளியைத் தமிழனோ தமிழனை மலையாளியோ சுரண்டுகிறான் என்று எண்ணுவதற்கு இடமில்லை. இங்கே-தமிழர்கள் வாழ்கிறார்களே-என்ற எண்ணம் மலையாளிக்குத் தோன்றுமே யானால், அங்கே சென்னையில்-மலையாளிகள் வாழ்கிறார்களே-என்ற எண்ணந்தான் தமிழருக்குத் தோன்றும். இந்த எண்ணம் வளர வளர நமது-பொது எதிரியை மறந்து-ஆரியத்தின் ஆதிக்கத்துக்கும், வடநாட்டார் ஏகாதிபத்தியத்திற்கும், மார்வாரி குஜராத்திகளின் வாணிபச் சுரண்டலுக்கும்-நாம் என்றென்றும் தலைசாய்க்க நேரிடுவதோடு-நம்மிடையே குழப்பத்திற்கு இடந் தந்தவர்களாவோம்.

நாட்டுப் பிரிவினையே நலம் பயக்கும்

எனவேதான் தி. மு. கழகம், நமது தனி உரிமைகளை, நாமே மதித்து நடக்கவும், நம்முடைய பொது எதிரியை அறிந்து கொண்டு, பொதுவான விடுதலையைப் பெறவும் திராவிடநாடு ஒரு தனி நாடாக விளங்க வேண்டும் என்றும் கூறுகிறது.

மொழிவாரி மாகாணங்கள் எவ்வளவு நியாயமோ, அவ்வளவு நியாயங்களோடு இன்னும் பல நியாயங்களையும் கொண்டுள்ளது. இனத்திற்கு ஓர் இடம், வாக்கத்திற்கு ஓர் வட்டாரம் என்ற அடிப்படையில் அமைந்த திராவிட நாடு கோரிக்கை. அது தமிழ் நாடானாலும், மலையாளமானாலும் எதற்கெடுத்தாலும் வடநாட்டு ஆட்சிப் பீடத்தையே எதிர்பார்த்திருக்கும் கேவலம் நீங்கவும் தொழில் துறைகளில், ஆலை அமைப்புக்களில் நமது தேவைக்கும் முயற்சிக்கும் ஏற்ப வெற்றி காணவும், நம் கலை நாகரிக மனப்பண்புக்கேற்ப, நமது மொழியிலேயே, நம்மை நாமே ஆண்டு கொள்ளவும், நம்மை வடநாட்டார் சுரண்டலினின்றும் விடுவித்துக்கொள்ளவுமே, நம்மிடையே ஐக்கிய திராவிடம் அமைப்பது அவசியமாகிறது.

இந்த இலட்சியத்தோடுதான் தி. மு. கழகம், சமூக பொருளாதார, அரசியல் துறைகளில்-திராவிடர்களின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு வருகிறது. எனவேதான், சிலர் பழி சாற்றி இக்கழகத்தை ஒழித்துவிடத் திட்டமிடுகிறார்கள்.

இங்குள்ள பலரும் எம்மை ஏதோ குற்றவாளிகள் என்று கருதித்தான் இருக்க முடியும். எமது கருத்துக்களை—நோக்கங்களை அறிவதற்கு முன். நாங்கள் குற்றவாளிகள் தானா? என்பதை இங்குள்ள தமிழ்த்தோழர்களும் மலையாள நண்பர்களும் தாங்களே சிந்தித்து முடிவு செய்து கொள்ளும்படி கிடைத்த இந்த வாய்ப்பிற்காக நான் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

நானும்-மற்ற நண்பர்களும் கூறியதைச் சிந்தித்துப்பார்த்துச் சரியென்று பட்டால்—எமது தி. மு. கழகத்தில் சேர்ந்து, ஆதரித்து — முன்வர வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்." என்று பேசியதோடு, கடவுள் பெயரால் நடைபெறும் ஊழல்களை விவரித்தும்—நமது இயக்கம், அந்நாளில் மலையாளியான டாக்டர் நாயரின் உழைப்பிலே அரும்பி; தெலுங்கரான தியாகராயரின் தலைமையிலே வளர்ந்து, தமிழரான—டாக்டர். நடேசனாரின் இனப்பற்றினாலே நிமிர்ந்து-பெரியாரின் தலைமையிலே நிலைத்துத்திடமென நிகழ்ந்த தலைவரின் தகாத செயலால் எப்படி— இன்று, அது, திராவிட முன்னேற்றக் கழகம் என்ற பெயரில், அறிவும், ஆற்றலும் எழுச்சியும் கொண்ட அண்ணாத்துரை அவர்களது கருத்தின்படி பணியாற்றத்தொடங்கியுள்ளது என்பதையும், விளக்கிப் பேசி முடிக்கும்நிலையில், மலையாளத் தோழர்களும், தமிழ் நண்பர்களும் கேட்ட பலப்பல கேள்விகட்கும் விளக்கமாக விடையளித்தார். வெறுப்புணர்ச்சியோடு வந்தவர்களும் திருப்தியடைந்து கையொலி செய்தனர்.

தோழர் அன்பழகன் அவர்களின் விரிவுரை முடிந்தவுடன், தலைவர் முடிவுரை கூறவும், தோழர் நம்பி நன்றி உரை கூறவும் இரவு 9-மணிக்கு விழா மிகச்சிறப்பாக முடிவுற்றது. இவ் விழாச்சிறக்க, செயலாளர் நம்பி, தலைவர் மணி ஆகியோரது முயற்சியும், அவர்கட்குவேண்டிய பல உதவிகளையும் செய்து தந்த தோழர் சிதம்பரம், அவர்களது ஒத்துழைப்பும்—மற்ற இளைஞர்களது பணியும் பெரிதும் பாராட்டத்தக்கன. (ந-தி)

திராவிட மாநில ரயில்பாதையாகட்டும்

வேறு பெயர் சூட்டுவது விபரீதத்திலேயே முடியும்

இந்திய யூனியன் ஆட்சிக்குட்பட்ட நாட்டில், 36,000 மைல் தொலைவிற்கு ரயில் பாதை போடப்பட்டிருக்கிறது. இப்போது இதனை ஆறுயிரம் மைல் கொண்ட 6 பிரிவுகளாகப் பிரிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு பிரிவுக்கும் ஒரு ஜெனரல்மானேஜர் இருப்பார். இந்த 6 பிரிவுகளில் ஒவ்வொன்றும் 800 மைல் கொண்ட துணைப் பிரிவுகளாக பிரிக்கப்படும். இந்த பிரிவுகளின்படி தென்னிந்திய ரயில்வே, தென்மராட்டா ரயில்வே, மைசூர் சமஸ்தான ரயில்வே ஆகிய மூன்றும் ஒன்றாக இணைக்கப்படும் என்று தெரிகிறது. இப்படி இணைக்கப்பட்டால், இதற்குகிரேட் திராவிடியன் ரயில்வே—திராவிட மாநில ரயில் பாதை—எனப் பெயரிட வேண்டுமென்று, திராவிட மக்கள் நீண்ட காலமாகச் செய்துகொண்டிருக்கும் கோரிக்கையை நிறைவேற்ற வேண்டுகிறோம்.

காஞ்சியில் கலாசாலை

காஞ்சி பெருமக்களின் அரும் முயற்சி

காஞ்சிபுரத்தில் ஒரு கலாசாலை ஏற்படுத்த அவ்வூர் பிரமுகர்கள் சிலர் முயற்சி செய்து வருவதாகவும், அதற்கென 50 ஏக்கர் நிலத்தை இனமாக வழங்குவதாகவும் வாக்களித்திருப்பதாகத் தெரிகிறது. தோழர் கந்தசாமி முதலியார் என்பவர், ரூ. 50,000 இதற்காகக் கொடுத்திருக்கிறாராம். இக் கலாசாலை அமைக்கும் பணியை மேற்கொள்ளுவது சம்பந்தமாக, போர்டு தலைவர் டாக்டர் டி. சடகோப முதலியார் அவர்கள் தலைமையில், கடந்த 20ம் தேதி ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் டாக்டர். பி. எஸ். சீனுவாசன், எம். எல். சி. தோழர்கள் அ. க. தங்கவேலர், வேணுகோபால் பிள்ளை, டி. எஸ். நடராஜ பிள்ளை, சொக்கலிங்க முதலியார் ஆகியோர் ஷை கலாசாலையின் அவசியம் பற்றி பேசியிருக்கின்றனர்.

காஞ்சிபுர பெருமக்களின் இத்தகைய பெரு முயற்சியை மனதாரப் பாராட்டுகிறோம். காஞ்சி தமிழ் நாட்டு நகரங்களுள் முக்கியமானதொரு நகரமாகும். முக்கியம் என்று இங்கு நாம் குறிப்பிடுவது ஸ்தல புராண கருத்துப்படி அல்ல. காஞ்சிபுரம் பல சந்தர்ப்பங்களில் திராவிடர் இயக்கத்தின் உற்பத்தி ஸ்தானமாக இருந்து வந்திருக்கிறது. என்ற காரணத்தைக் கொண்டே காஞ்சி ஒரு முக்கியமான நகரம் என்கிறோம். இத்தகைய சிறப்பு பெற்ற ஊரில் கலைக்கூடம் அமைக்கப்படுவது பெரிதும் மகிழ்ச்சிக்குரியது, வரவேற்கத்தக்கது.

அறிவை அடக்கும்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றனர். அந்த அச்சகம் மிகச் சிறியது அதனால தாங்க முடியாத பாரம இந்த ஜாமீன் தொகை. எனவே, அவர்கள் அச்சகத்தையே மூடிவிட வேண்டிய நிர்ப்பந்த நிலையிலே உள்ளனர். இதே முறையில அடக்கு முறை வேகம் சில மாதங்களாகவே தாண்டவமாடுகிறது. ரோஷமுள்ள சர்க்காரானல், புத்தகத்தைப் பறிமுதல செய்யாது. பதில் எழுதிப புத்தகம வெளியிட வேண்டும. இந்த போல புத்தகம எழுதிய குற்றத்திற்காக என்னை, 153 செக்ஷனபடி சிறையிலடைக்க ஏற்பாடுகள் நடக்கிறதாம். அப்படி யெங்களை யெல்லாம் அனுப்புவது. அதிலும் இச்சமயத்தில மிகவும நலலது. ஏன, சிறையிலே கொலை, களவு முதலிய குற்றம புரிந்த கைதிகள தொகையை விட. இன்று அரசியல் கைதிகள மிக மிக அதிகம அங்கே. நாங்கள யாவரும கம்யூனிஸ்டுகள், சோஷலிஸ்டுகள், முன்னாள காங்கிரஸ்காரர்கள முதலானோர் யாவரும கூடிப் பேசி ஒரு கூட்டு ஒப்பந்தத்தோடுதான் நாங்கள் வெளியே வருவோம்.

எச்சரிக்கை !

திராவிடர் கழகம் தனியே திராவிட முன்னேற்றக கழகம தனியே, ஒரே கொள்கைக்காக. ஒரே குறிக்கோளை நாட்டிலே பரப்ப. அவை இரட்டைக குழல் துப்பாக்கி. இரண்டும தனித்தனியாகஒரே குறிக்கோளை அடைய வேலை செய்யும. போரிடும முறை. செலலும வழி பிரசாரமுறை ஒரு சிறிது மாறலாம. அவ்வளவுதான. இதனால் எம்மை ஒழிக்க மனப்பால் குடிக்காதே என்று சர்க்காருக்கு எச்சரிக்கை செய்கிறேன.

காலம் மாறிவிட்டது

நேற்று வரை சைனாவின் தலைவராக இருந்த சியாங்கேஷேக. இன்று நாட்டை, நாட்டின தலைமையை இழந்தார். காரணம என்ன? அவரே சகலமும அங்கு. அவர் கட்சியே ஆட்சி நடததியது. எதிர்க கட்சி கிடையாது, கூடவே கூடாது என்ற நிலை, எதிர்த்தவர், எதிர்த்துப் பேசுபவர் மாண்டனர். அவ்வளவு கெடுபிடியுடன ஆட்சி நடத்தினார். ஆனால இன்று நிலை என்ன? ஓடி ஒளிந்து கொண்டிருக்கிறார். சாதாரண ஆள். மாசேதுங, இன்று மக்கள தலைவராக விளங்குகிறார். காலம மாறிவிட்டது. நிலைமை மாறிவிட்டது, மக்கள் மனப்பண்பு மாறிய காரணத்தால இன்று நாட்டிலே நடப்பது என்ன; சர்வாதிகாரந்தான், மத்திய ஆட்சி மாகாண ஆட்சியை ஆட்டிப் படைக்கிறது புத்தகம பறிமுதல், நாடகம் தடை, அச்சகத்திற்கு ஜாமீன் கெடுபிடி, பேச 144 என்ற தர்பார்.

எது கெட்டது ?

சமீபத்தில் பிரதமர் குமாரசாமிராஜா கோவையில் பேசும் போது நாட்டில் இப்போது கெட்ட கெட்ட புத்தகங்கள் வருகின்றன என்று வருத்தப் பட்டார். எது கெட்ட புத்தகம் உள்ளதை உள்ளபடி எடுத்துக் கூறுவது கெட்டதா, ஆறுமுகம் உண்டா, ஆதிசேஷன் மெய்யா? ஆபாசக்கடவுள் தேவையா? என்று கேட்பது எழுதுவது கெட்டதா? என்று கேட்கிறேன்.

தப்புக்கணக்குப் போடாதே !

இதே பிரதமர் நாகர்கோயிலில என். எஸ். கே. காந்திஸ்தூபி திறந்தநாளன்று பேசினார் காந்தி விக்ரகம் இல்லாது ஸ்தூபி ஏற்படுத்தியது நல்லது நாட்டிலுள்ள விக்ரகம் போதும் இனித்தேவையில்லை என்று. அப்படிப்பட்ட குமாரசாமி ராஜா அங்கு பேசியிருக்கிறார் சமீபத்தில் அவரே பேசுகிறார் கோவையில். நாட்டில் இப்போது கெட்ட கெட்ட புததகங்கள் எலலாம் வருகின்றன என்று எப்படி வரும் என்று கேட்கிறேன்? தோட்டத்திலே பாம்பு வருகிறது என்றால் என்ன பொருள். முள்வேலி சரியில்லை என்பதுதானே. பாம்பு புற்று அமைய வழி, இருந்தால்தானே பாம்புவரும் தோழர் ஜி. டி. நாயுடு வீட்டிலே சென்று உம் வீட்டிலே பாமபு உண்டா? வருமா? என்றால் என்ன சொல்வார். இங்கு வராது வாவழியில்லை. புதர் கிடையாது சேரில்லை, சக்தியில்லை பாம்புப் புற்று அமைய வகை கிடையாது என்று தானேபேசுவார் இதைவிட்டு பாழடைந்த வீட்டில் மூட்புதர் நிறைந்த. பாழுங்கிணறு உள்ள தோட்டத்தில் பாமபு நிச்சயம் வரத்தானே செய்யும இந்த நாட்டிலே நானகு ஜாதிகள் இருக்கின்றன. அது மட்டுமா? ஜாதிக்குள் ஜாதியாக நாலாயிரம பிரிவுகள். வேறு இருக்கின்றன நாட்டிலுள்ள கெட்ட கெட்ட விஷயங்களைப் போக்க. நலிவுகளைச் சீர்படுத்தத்தான் நாங்கள சீர்திருத்தப் பிரசாரப், பணிபுரிகிறோம அதற்காக ஏடுகளை எழுதுகிறோம் இது உண்மையில கொண்டுள்ள உணர்ச்சியின விளைவு-விஷமத்தனமல்ல விவேகத்தின விளைவு-வேறு வேலையற்ற காரணத்தால் அல்ல—மூடநம்பிக்கையை முறியடித்தாக வேண்டும என்ற சிறந்த கொள்கைக்காக இப்படிப்பட்ட பகுத்தறிவுப் பணிபுரியும எங்களை. நீ அடக்குமுறை கொண்டு தாக்கிச் சின்னாபின்னப் படுத்தநினைப்பது மிக மிகத் தவறு வீணாக நீ தப்புக் கணக்குப் போடுகிறாய். எச்சரிக்கையாக இரு எங்களைக கொடுமைப் படுத்தி சிறைக் கோட்டத்திற்குள் அடைத்து விட்டு. நீ கொட்டமளித்து கோலாகல வாழ்க்கை நடத்த முடியாது, முடியவே முடியாது. திராவிடர் கழகம் தாக்கித் தடை செய்யப்பட்டால், திராவிட முன்னேற்றக் கழகம் பணிபுரியும-திராவிட முன்னேற்றக கழகமும நசுக்கப்பட்டால, சுயமரியாதைச் சங்கம் வேலைசெய்யும். அதுவும் போனால் பகுத்தறிவுக் கழகம, பின அறிவு மன்றம், பின சீர்திருத்தக் கழகம் என்று இப்படி பற்பல ருபங்களுடன் எமது அறிவுப் பணி, அறிவுப் படைதிரட்டும வேலை, நாட்டிலே நலலறிவுப் பிரசாரம் தொடர்ந்து நடநதபடிதான் இருக்கும். அதை உன்னால் தடை செய்து விடமுடியாது என்று இந்தச சர்க்காருக்கு எடுத்துக கூறுகிறேன். எடுததெதற்கெல்லாம தடியடி, தர்பார். எழுத்துக்குத் தடை, புத்தகங்களபறிமுதல், பேச்சுக்கு 144 நாடகத்திற்குத் தடை என்ற வெள்ளைக்காரபாணி. போக்கு இன்றும உன்னை விட்டுப போகவில்லை. ஜாக்கிரதையாக இரு. வீணாக எம்மோடு மோதாதே. நாட்டிலே நலலறிவுப் பிரசாரம புரியும எங்களைத் தடுக்காதே தடுத்து நிறுத்த உன்னால் முடியாது என்பது மட்டுமல்ல. அது வீண் வேலை, விவேகமற்ற செயல். வேண்டப்படாதது என்ற காரணத்தால் மனிதாபிமானம் ஒரு சிறிதாவது உன்னிடம இருப்பின் எங்களைத் தடை செய்யாதே, அது தவறு தவறு என்று எடுத்துக் கூறி நலலபடி நட என எச்சரிக்கிறேன் சர்க்காருக்கு. திராவிட முன்னேற்றக கழகத்தில் சேர்ந்து அறிவுப்பணி, அறிவுப் பிரசாரம செய்ய முன் வாருங்கள்; அடக்கு முறையை எதிர்ப்போம, அது நம்மை அடக்கிவிடமுடியாது; என்று கூறி, மறுமுறையும உங்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து எனது சொற்பொழிவை முடிக்கிறேன்.

———

பத்திரிகைக்காரரைப் போய்க் கேள்

வணிகரிடம் மக்கள் பெறும் விடை

திடீரெனச் சென்னைக் கடைகளில் சர்க்கரைப் பஞ்சம் ஏற்பட்ட போது, அரசாங்கம் நிலைமையைச் சமாளித்து விட்டதாகவும், ஒவ்வொரு ரேஷன் கார்டுக்கும் வாரத்திற்கு ஒரு வீசை சர்க்கரை கொடுக்க ரேஷன் கடைகளில் ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் அறிக்கை வெளியிட்டது. ஆனால், கடைகளில் சர்க்கரை வாங்கப் போன மக்கள் 5 பலம் சர்க்கரை கூட வாங்க முடியாமல் அவதிப் பட்டனர். கடைக்காரர்களிடம அரசாங்க அறிக்கையைப் பற்றிக் கூறியபோது அரசாங்கத்தைக் கேள். அதை வெளியிட்ட பத்திரிகைக் காரரைக்கேள், என்றெல்லாம் கடைக்காரர்கள் கூறினார்களே தவிர சர்க்கரை கொடுக்கவில்லை. கள்ள மார்க்கட்டில் மிக உயர்ந்த விலையில் சர்க்கரை கிடைக்காமற் போகவில்லை.

இப்போது உணவு தானிய விநியோக விலை குறைப்பதுபற்றி ஆலோசித்து வருகிறது. விரைவில் அறிக்கை வெளிவரலாம் பத்திரிகைகளில். ஆனால் பலன் என்ன? மக்கள் கடைகளில் வாங்கும்போது பழைய நிலைமையில் மாறுதல் இருப்பதில்லை. எனவே, விலை குறைவாகப் பத்திரிகைகளில் அறிக்கை வெளிவரலாம். அவற்றை அரசாங்கம் அனுப்பலாம். ஆனால் மக்கள் அவற்றினால் எத்தகைய பலனும் பெற முடிவதில்லை. அறிக்கைவிடும் அரசாங்கம், அதைச் செயலில் நிறைவேற்ற முயல வேண்டாமா ?

அறிவிப்பு

தேனி திராவிட முன்னேற்றக் கழகக் காரியதரிசி, நமது மாலைமணி ஏஜெண்டாக தேனிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

மானேஜர், 'மாலைமணி'

மாகாணம் முன்னேற வழி, வகை, வக்கு ஏதும் இல்லை!

தேர்தல் காலத்தில் மக்களுக்கு அளித்த உறுதி எங்கே ?

திருப்பூரில் தோழர் அண்ணாத்துரை

திருப்பூர், அக். 19—

தோழர்கள் அண்ணாதுரை. பெத்தாம்பாளையம் பழனிச்சாமி ஆகியோர் திருப்பூருக்கு 19-10-49ல் சுமார் மாலை 6-30 மணிக்கு வந்து சேர்ந்தனர்.

திருப்பூர் காட்டன் மார்க்கட்டிலிருந்து அண்ணா அவர்களும், தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி திருப்பூர் என். ஆர். சுப்பிரமணியம் அவர்களும் இரண்டு காளைகள் பூட்டிய சாரட்டு வண்டியில் அமர்ந்து பெரியதொரு ஊர்வலம் தொடங்கியது, வழிநெடுகும் ஒரே ஜனத்திரள் கூடியிருந்தது. மேள தாளங்கள் முழங்கின. மாணவர், பொதுமக்கள், கழகத் தோழர்கள், பெண்டிர் யாவரும் வழியெங்கும் தலைவர்களைக் கண்டுகளித்து ஆரவாரம் செய்து கொண்டேயிருந்தனர். மாலை 5 மணியிலிருந்தே கனத்தமழை பெய்து 7மணி அளவுக்கு சிறு தூற்றலாக இருந்தும் மக்கள் திரளாகக் கூடியிருந்தனர்.

மாலை 7 மணிக்கு திருப்பூர் பழைய ரேடியோ மைதானத்தில் தி. மு. க துவக்கவிழா, தோழர் பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்கள் தலைமையில தொடங்கியது. கூட்டம் தொடங்கு முன் திருப்பூர் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத்தினர் அண்ணாதுரை அவர்கட்கு ஓர் வரவேற்புப பத்திரம வாசித்து அளித்தனர்.

மழை சிறிது கனமாகப்பெய்ய ஆரம்பித்தும், மக்கள் கலையவில்லை. கூட்டத்திற்குதோழர்கள் திருப்பூர் எஸ். ராமசாமி முதலியார். ஜூபிடர் சோமு, மஸ்தான். ஏ. எஸ். ஏ. சாமி, வாசு செட்டியார், ஷெரீப் (திருப்பூர் ரைஸ் மில) எஸ். ஆர். சுப்பிரமணியம், ஈரோடு சந்தானம், எஸ். அப்பாவு, நடிகர் டி. வி. நாராயணசாமி, எஸ். வி. லிங்கம், தனலக்ஷ்மி மில் மானேஜிங் டைரக்டர் இராமசாமி, ஆறுமுகம்பிள்ளை, பாலசுப்பிரமணியம், குமாரசாமி செட்டியார், மாங்கிலால சேட் ஆகிய உள்ளூர் வெளியூர் முக்கியஸ்தர்களும, மற்றும் சுற்று வட்டார நகர, கிராமங்களிலிருந்து ஏராளமான வியாபாரிகளும், பொது மக்களும், தொழிலாளர்களும் வந்திருந்தனர். தோழர் அண்ணாதுரை அவர்கள் சுமார் 1-30 மணி நேரம் கழக நிலை பற்றியும், தற்கால அரசியல், பொருளாதார, சமுதாயநிலைபற்றியும் மிகவும் தெளிவாகப்பேசினார்.

அவர், திராவிடர்கழகம் விட்டு விலகி தி. மு. க. அமைத்த காரணங்களை விளக்கி விட்டு, தற்கால அரசாங்கம் எதற்கெடுத்தாலும், 144, தடியடி, அடக்குமுறை, புத்தகம் பறிமுதல், அச்சகம் ஜாமீன் போன்ற கெடுபிடிகள் நடத்தி தர்பாராட்சி நடத்துவதைக்கண்டித்தார். அடுத்தபடியாக மக்கள் தங்களுக்கு வேண்டும் எத்தகைய சவுகரியங்கட்கும், பாலம், பள்ளி, ஆஸ்பத்திரி, பாதை முதலிய எதுவானாலும் செய்துதர சர்க்கார், பணம் இல்லை, என்று "இல்லை இல்லை என்ற" இல்லை புராணத்தைப் படித்து வருவதானது உண்மையிலேயே வெட்கக்கேடு, பரிதாபத்திற்குரியது என்றும், அவர்கள் தேர்தல்காலங்களில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளைச் சிறிதும் மதியாது, மனித உரிமையையே, எழுத்து, பேச்சு, முதலிய அடிப்படைச் சுதந்திரங்களையே பறிப்பது, மிக மிகக் கொடுமையானது என்றும் கூறினார். மேலும் மாகாண சர்க்காருக்குத் தக்க அதிகாரமில்லையென்றும், யாவும் மத்திய சர்க்காரே எடுத்துக் கொண்டிருப்பதால் நமது மாகாணம் முன்னேற வழி, வகை, வக்கு ஏதும் இல்லை. அதுவுமின்றி, வடநாட்டு, பொருளாதாரம், வாணிபம் ஏற்கனவே மலையென வளர்ந்துவிட்டது, அதற்கு மார்க்கட்டாக, சந்தையாகத் தென்னாடு - திராவிடநாடு, சென்னை மாகாணம் விளங்குகிறது. வளர்ந்தோங்கியுள்ள வடநாட்டு வாணிபத்தோடு, தென்னாடு போட்டியிட முடியாது, முடியாத நிலையில் நிலைகெட்டுத் தவிக்கிறது. இந்த நிலை மாற, வடநாட்டுப்பிடியிலிருந்து தென்னாடு, சென்னை மாகாணம் திராவிடநாடு விடுதலை பெற்றேயாக வேண்டும் என்று விளக்கிப் பேசினார். இறுதியாக சமுதாய சீர்திருத்தம் ஏற்பட தி. மு. க. உழைக்கும் என்று உறுதியளித்து விட்டு, கூட்டத்திற்கு வந்திருந்த மக்களுக்கும், அதனை ஏற்பாடு செய்த கழகத் தோழர்கட்கும், வரவேற்பளித்தமாணவர்கட்கும் நன்றி தெரிவித்துவிட்டு, சக்தி படைத்தோர், நெஞ்சுறுதி கொண்டோர், நாட்டின் நலிவைப் போக்கிடும் திடம் படைத்தோர், அக்கறை கொண்டோர் அனைவரும் தி. மு. கழகத்தில் சேர்ந்து பணிபுரியவேண்டு. வ வேற்றுத் தம் பேச்சை முடித்துக்கொண்டார். கூட்டம் முடிந்ததும் மக்கள் தலைவர்களை வாழ்த்திக்கொண்டே கலைந்து சென்றனர்.

பின்னர் இரவு 9-மணிக்கு திருப்பூர் ரைஸ் மில்லில் தோழர் ஷெரீப் அவர்களுக்கும், ஜூபிடர் சோமு அவர்களுக்கும் தலைவர்களுக்கும், மற்றும் முக்கிய உள்ளூர் வெளியூர் தோழர்களுக்கும் விருந்தளித்து உபசரித்தனர். இரவு சுமார் 10-மணிக்கு மாணவர் கூட்டம் ஒன்று வந்து அண்ணாவைக் கண்டு பற்பல பிரச்னைகளையும், திராவிட மாணவர் முன்னேற்றக்கழகம் அமைப்பது பற்றியும் பேசிக்கொண்டிருந்துவிட்டுப் போயினர்.

சந்தா விவரம்

3 மாதம் சந்தா	ரூ	6—0—0
6 மாதம் சந்தா	,,	12—0—0
ஒரு வருடசந்தா	,,	24—0—0

மூன்று மாதத்திற்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

—மானேஜர்.

வாக்குரிமை பறிபோகிறது!

இலங்கை அரசாங்கத்தின் இதயமற்ற செயல்!

"இந்த மசோதா சட்டமாக்கப்பட்டால் மற்ற வகுப்பு மக்களுக்கு ஏற்பட்டிராத கட்டுப்பாடுகளும், தொல்லைகளும் இந்திய வகுப்பினருக்கு ஏற்படும். ஓட்டுரிமை சம்பந்தப்பட்ட வரையில், இதனால் இந்தியருக்கு தொல்லைகள் ஏற்படும். தற்போதைய சட்டப்படி பிரிட்டிஷ் குடி மக்களாக இல்லாதவர்களுக்கு ஓட்டுரிமை மறுக்கப்படுகிறது.]

தற்போது இலங்கையிலிருக்கும் இந்திய வகுப்பினர் அனைவரும் பிரிட்டிஷ் குடிமக்களே யாவர். ஆகவே இதைக் காரணமாகக் காட்டி, எந்த இந்தியருக்கும் ஓட்டுரிமை மறுக்கக்கூடாது. இந்திய வகுப்பினரில் பெரும்பாலோர் இலங்கைக் குடிமக்கள் அல்ல என்பது அனைவரும் அறிந்ததே. இதன்படி பார்த்தால் இலங்கைக் குடிமக்கள் அல்லாத இந்தியர் அனைவரும் ஓட்டுரிமையை இழக்கும்படி செய்கிறது இம்மசோதா" என்று அண்மையில் இலங்கைப் பிரதிநிதி சபையில், தமிழர் காங்கிரஸ்கட்சி உறுப்பினரான தோழர் எஸ். ஜே. வி. செல்வநாயகம் பேசியபோது குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கை அரசியலார் தேர்தல் சட்ட திருத்த மசோதா என்ற பெயரில் ஒரு மசோதாவை தயாரித்துள்ளார். இம்மசோதாவை இலங்கை பாராளுமன்றத்தில், முதலமைச்சர் தோழர் டி. எல். சேனநாயகா அவர்கள் முன் மொழிந்தபோது, தோழர் செல்வநாயகம் ஒரு ஒழுங்கு பிரச்னையை எழுப்பி மேற்படி மசோதாவின் சில பகுதிகள் அரசியல் திட்டத்திற்கே முரணாக அமைந்துள்ளன என்பதை எடுத்துக்காட்டவே மேற்கண்டவாறு பேசியுள்ளார்.

இலங்கை இந்தியர் பிரச்னை என்று அடிக்கடி பேசப்படுவதெல்லாம், பெரும்பாலும் திராவிடநாட்டு மக்களையே குறிப்பதாகும். பொதுவாக இந்தியாவிலிருந்து அயல்நாடு சென்று அவதியுறுவோரில் திராவிட நாட்டவர் தொகையே மிகுதி. அதிலும் இலங்கையில் குடியேறி வாழும் மக்களில் முக்கால் பகுதியினர் திராவிடர்கள்—தமிழர்கள் என்பது சொல்லாமலேயே விளங்கும். இலங்கை இந்தியருக்காகப் பரிந்து பேசும் உறுப்பினர் ஒரு தமிழராக இருப்பதே இதற்குப் போதிய எடுத்துக்காட்டாகும்.

ஒருநாட்டு அரசியலார் தம்நாட்டு மக்களின் உரிமைகளையும்; உடைமைகளையும் பாதுகாத்துக்கொள்வதற்கென சட்டங்கள் இயற்ற வேண்டுவது அவசியமே. எனினும், குடி உரிமைச் சட்டமும், வாக்குரிமைச் சட்டமும் செய்வதில் சற்று தெளிந்த அறிவுடையோராய் இருத்தல் வேண்டும். அயலார் என்ற காரணங்காட்டி குடியேறியுள்ள மக்கள் அத்தனை பேரையும் கொடுமைக்குள்ளாக்குவது சரியல்ல.

தோழர் செல்வநாயகம் சுட்டிக்காட்டியிருப்பதுபோல், இலங்கை அரசியலார் கருத்துப்படி இன்று இலங்கை வாழ் மக்களில் பெரும்பாலோர் இலங்கை பிரஜைகளல்ல என்பது உண்மையே, ஆனால் பல்லாண்டுகட்கு முன்னரே, அதாவது இலங்கை பண்படாதிருந்த காலத்தில், அந்நாட்டிற் குடியேறி, அதனை வளம் பொருந்திய நாடாக்கியவர் இவ்விந்திய உபகண்டத்தைச் சேர்ந்த திராவிட மக்களேயாகும். இன்று அங்கு தேயிலைத் தோட்டங்களாகவும், ரப்பர் தோட்டங்களாகவும் திகழும் தோட்டங்கள், திராவிடரின் உழைப்பால் உருவானவையேயாகும். திராவிடரால் இலங்கை சுரண்டப்படவில்லை. வளம் பெற்றது.

எனவே, இலங்கை அரசியலார் எக்காரணம் பற்றியும் இலங்கை இந்தியரின் உரிமைகளைப் பறிக்க முயல்வது சரியல்ல, முறையல்ல, நீதியுமாகாது. இலங்கை அரசியலார் இப்பொழுது செய்திருக்கும் சட்டத்தின்படி, இலங்கைவாழ் திராவிடர் தமது வாக்குரிமையை இழக்கவேண்டியவர்களாகின்றனர் வாக்குரிமை அரசியல் வாழ்வுக்கு அடிப்படை. அதனைப் பறிப்பது அரசியல் வாழ்வையே பறிப்பதாகும். அதிலும் இலங்கைக்கு வாழ்வளித்த மக்களுக்கு வாக்குரிமை அளிக்க மறுப்பது கொடுமையாகும். எனவே, இலங்கை போன்ற அயல் நாடுகளில் நம்மவர் உரிமை பறிக்கப்படும் காட்சியைக் கண்ட பிறகேனும் திராவிட நாடு அமைய வேண்டியதன் அவசியத்தை திராவிடர் உணர்வார்களாக.

இந்திய சர்க்காரின் கைவிரிப்பும் சென்னை சர்க்காரின் கலக்கமும்!

………………: (0) :………………

கடன் கேட்கும் முயற்சி கடைத்தேறுமா?

இந்திய அரசாங்கத்தின் வரவு செலவுக கணக்கில் 45 லட்சம் ரூபாய மிகுதி ஏற்படும் என்று கணக்கிடப்பட்டது. ஆனால், 45 கோடி ரூபாய் துண்டு விழுந்து விட்டது. எனவே, இந்தக குறைவைச் சமாளிக்க, இந்திய அரசாங்கம் உதவிகளைக் குறைத்தும், செலவுகளைக் குறைத்தும், வளர்ச்சித் திட்டங்களை நிறுத்தியும் வேலை செய்து வரும் நிலைமையிலிருக்கிறது. இவ்வாறு மத்திய அரசாங்கத்தின் வரவு செலவு கணக்கு இருக்கிறதென்றால், இது அங்கு ஆட்சி நடத்தும் அமைச்சர்களின் திறமையைக் காட்டும்.

ஆனால், மத்திய அரசாங்க உதவிகிடைக்காமற்போகவே, சென்னை அரசாங்கம் வேறு வழியின்றி நம்நாட்டு மககளிடமே கடன் கேட்கும் அளவுக்கு வந்துவிட்டது. சென்னை அரசாங்கத்திற்குப் பண உதவி செய்ய மக்கள் முன் வருவர். ஆனால் சென்னை அரசாங்கம் வளர்ச்சித் திட்டங்களுக்குப் பணம் வேண்டும் என்று கேட்பதைவிட, திட்டங்களை நன்கு உருவாக்கி, இன்னின்ன வளர்ச்சித்திட்டங்கள்போடப்பட்டிருக்கின்றன. அவை முடிவுபெற இவ்வளவு காலம் பிடிக்கும், அதனால் கிடைககும் பயன்கள் இன்னவை என்று தெளிவுபடுத்தித் திட்டங்களை வெளியிட்டுக் கடன் கேட்பதே மக்கள் மனம் தெளிந்து கடன் தருவதற்கு ஏற்ற செயலாக இருககும்.

கழக நடவடிக்கைகள்

ஆம்பூர்:—இவ்வூர் கிளைக் கழகச் சார்பில், கடைவீதியில் 16-10-49 காலை 10-மணிக்குத் தோழர் ஏ. ஜி. சாமி அவர்களால், தி. மு. க. கொடி ஏற்றுவிக்கப்பட்டது. பிறகு அனைவருககும் இனிப்பு வழங்கப்பட்டு நன்றி கூறலுடன் கொடியேற்று விழா முடிவுற்றது. (செ-ர்)

* * *

வத்தலகுண்டு :— கீழ்க்கண்ட முகவரியில், தி. மு. கழகக் கொடி இலவசமாகத் தைத்துக்கொடுக்கப்படும்.

ப. ராஜு,
மெயின் ரோடு, வத்தலகுண்டு.

* * *

இராஜபாளையம் :— திராவிட முன்னேற்றக் கழகம் — இராஜபாளைய கிளையின் அமைப்புக்கூட்ட நிகழ்ச்சிச செய்தி (வெளியூர் 16—10—49 'மாலைமணியில்' வந்துள்ளது)வில் தோழர் ஆர். பி. ஆதிநாராயணன், அவர்களை தற்காலச் செயற்குழுவில் துணை உறுப்பினராகச சேர்த்துப் படிக்கவும். (ஆ-ர்)

* * *

குறிஞ்சிப்பாடி:—தென்னாற்காடு மாவட்ட திராவிட முன்னேற்றக் கழகச செயற்குழு கூட்டம், 17—10—49 அன்று தோழர் இரெ. இளம்வழுதி அவர்கள் தலைமையில், குறிஞ்சிப்பாடி தமிழரசி வாசகசாலையில நடைபெற்றது. கூட்டத்திற்கு, தோழர்கள் கி. முனுசாமி, இரா. சாம்பசிவம், இராம. பழனிசாமி, த. மா. திருநாவுக்கரசு, சு. முத்துராமன், ஏ. தஙகவேலு, இ. பாண்டுரங்கன், மு. கேசவன், கு. கருப்பையா, பி. என். தேவதாஸ் ஆகியோர் வந்திருந்தனர். கூட்டத்திறகு வர இயலாமை குறித்து, தோழர்கள் குமார. தணிகாசலம, நெடுமாறன், ச. சிவப்பிரகாசம், பி. இளங்கோ ஆகியோர் கடிதம் அனுப்பி இருந்தனர். ஷை கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானஙகள் ஏகமனதாக நிறைவேறின.

(1) தெ. ஆ. மாவட்ட தி. மு. க. முதலாவது மாநாட்டைக் குறிஞ்சிப்பாடியில் நடத்துவதற்கான எல்லாப் பொறுப்புக்களையும் ஏற்றுக்கொள்வதற்காகத் தோழர் இரா. சாம்பசிவம் அவர்கள், உறுதி கூறியதின் பேரில் ஷை மாநாட்டை நவம்பர் 27-ம் தேதி குறிஞ்சிப்பாடியில் நடத்துவது.

(2) ஷை மாநாடு நடத்தும் நிர்வாகிகளை அடுத்தக் கூட்டத்தில் நிர்ணயிப்பது.

(3) சிதம்பரம், விருதாசலம், கடலூர் இம்மூன்று தாலுகாக்களிலும ரூ. 100 வீதமும், குறிஞ்சிப்பாடியில ரூ. 300-ம், மற்ற தாலுகாக்களில் ரூ. 75 வீதமும் வசூலித்து மாநாட்டுச செலவுக்குத தருவது.

பின்பு தோழர் இராம. பழனிசுவாமி நன்றிகூறக் கூட்டம் முடிவுற்றது. (வி. உ.)

* * *

மதுரை :— மதுரை சந்தப்பேட்டை அண்ணாத்துரை இலவச வாசகசாலையின் பொருளாளரும், தி. மு. கழக உறுப்பினருமான தோழர் ல. வ. கிருஷ்ணன் அவர்கள் 19—9—49ல் கைது செய்யப்பட்டு, ரிமாண்டில் வைக்கப்பட்டு பின்பு விடுதலைசெய்யப்பட்டார். சென்னை சர்க்கார் கம்யூனிஸ்ட் கட்சியை சட்டவிரோதமாக்கி கம்யூனிஸ்டுகளைக் கைது செய்தபொழுதே இவரும் கைதுசெய்யப்பட்டார். (செ-ர்)

* * *

சைதாப்பேட்டை:— இவ்வூர் பஜார்ரோடு எண், 87 கழகக் கட்டிடத்தில் தோழர் வாலறிவன் தலைமையில், ஓர் கூட்டம் நடைபெற்றது. அதுபோது வேலைநகாத் தோழர் சண்முகம் கழகக் கொடியை ஏற்றுவித்தார். தோழர் கதிர்வேல் பேசியபின் கூட்டம் முடிவுற்றது. (வி. உ)

* * *

மதுரை:— மதுரை மேற்குவட்ட நகர உட்கிளையின் சார்பாக, 16-10-49 காலையில் இரண்டு இடங்களில் தி. மு. க. கொடிகள் ஏற்றுவிக்கப்பட்டன. தோழர்கள் பி. எஸ். சோமநாதன், கி. நடராசன், சுந்தரராசு, ராமசாமி, கடம்பவனம் ஆகியவர்கள் கொடியேற்று விழாவில் பங்கு கொண்டனர்.

* * *

திண்டுக்கல்:— இவ்வூர் பகுத்தறிவுப் படிப்பகத்தின் சார்பில், 16 10 49 மாலை 6 மணிக்கு ஷை படிப்பகத்திற்கு முன்பு, தோழர் எஸ். கே. சாமி அவர்களால் தி. மு. கழகக்கொடி ஏற்றுவிக்கப் பெற்றது. (கெ-ர்)

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

தேனி, அக் 19—

"தேனி திராவிடமாணவர் முன்னேற்றக் கழகம்" 18-10-49 அன்று. தோழர் எஸ். சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் நடந்தகூட்டத்தில் நிறுவப்பட்டது. தோழர்கள் எஸ். சுப்பிரமணியம், சு. வா பாலரசு, மா. புன்னைவனம், சு. க தங்கமுத்து, தங்கஆனந்தன் ஆகியோர் தி மா. மு. க. அமைப்புப்பற்றிப் பேசிய பின்பு, செயற்குழுவொன்றுஅமைக்கப்பட்டது.

செயலாளர்- சு. க. தங்கமுத்து; துணைச் செயலாளர்- மா. புன்னைவனம்; நிதி உறுப்பினர்- ரா. காளியப்பன்; விளம்பர உறுப்பினர்- சு. வா. பாலரசு. ஏனைய செயற்குழுவினர்:— எஸ். சுப்பிரமணியம், ஜே. கி. முத்து, முத்துராமலிங்கம், துரைப்பாண்டியன், கோவிந்தராஜு, தியாகராஜபாண்டியன், கா. ராமசாமி, எஸ். கந்தசாமி, ஐசுவரிய பாண்டியன், கா. ஜமால், ரா கிருஷ்ணன், கே. கருப்பையா. தலைவர் முடிவுரைக்குப்பின் செயலாளர் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது. [வி-உ]

திராவிட இளம் பேச்சாளர் கழகம்

சிவகங்கை, அக். 19—

இவ்வூர் இளம்பேச்சாளர் கழகத்தின் கூட்டமொன்று 17-10-49 தோழர் தண்டபாணி அவர்கள் தலைமையில் நடந்தது. அதுபோது ஷை கழகம், திராவிட முன்னேற்றக் கழகக் கொள்கைகளின்படி தனது பிரசாரத்தையும், போக்கையும் மாற்றிக் கொள்வதாகத் தீர்மானித்தது. மேலும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

செயலாளர்: — தண்டபாணி; துணைச்செயலாளரும், விளம்பர உறுப்பினரும்:— மு. மாரிமுத்து; நிதிஉறுப்பினர்:— கு. சுப்பிரமணி; ஏனைய செயலுறுப்பினர்கள்:— தியாகராசன், வேலுசாமி, கற்பூர சுந்தரம், செண்பகம், பாலு, சாகுல் ஹமீது. சேக்தாவுத், ந. பாசுராமன், கி. ராமசாமி, சந்திரன், முத்தையா. (வி.உ)

நீத்தார் நினைவு

திருவிடையார்பட்டி, அக். 11—

இராமனுதபுரம் மாவட்டம், திருவிடையார்பட்டித் தோழர் வீ. சேதுராமன் அவர்களின் தாயார் 9—10—49ல் இயற்கையெய்தியமையால், அன்னாரின் இறுதிக் கடன்கள்யாவும் சீர்திருத்த முறையில் நடைபெற்றது. தன் அன்னையாரின் நினைவாகத் தோழர் வீ. சேதுராமன் அவர்கள் அனுப்பிய ரூபாய் ஒன்று வரப்பெற்றோம். (ஆ-ர்)

நாட்டு நடப்பு

திருச்சி— திருச்சி தேசியக் கல்லூரி மாணவர்கள கூட்டமொன்று 14-10-49-ல் நடைபெற்றது. அதுபோது "மாணவர்களுககு மதக கல்வி அவசியமா?" என்னும் பொருள்பற்றி சொற்போர் நிகழ்ந்தது. பல மாணவர்கள் சொற்போரில் பங்குகொண்டனர். இறுதியாக, வாக்கெடுப்பில் மதக் கல்வி வேண்டாம் என்றவர்களின் தொகை, வேண்டும் என்றவர்களின் தொகையைவிட நான்கு மடங்குகள் கிடைத்தன.

* * *

பொள்ளாச்சி— இவ்வூர் திராவிட முன்னேற்ற வாலிபர் கழகச் செயற்குழுக் கூட்டம் 15-10-49 அன்று, தோழர் அ. ச பாலு தலைமையில் நடைபெற்றது. அது போது சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பிறகு தோழர் பி. என். இராமாநுசம் தலைமையில், சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் அ. ச. பாலு, பழனிச்சாமி, உசேன், குலாம், ஆறுமுகம் ஆகியோர் பயிற்சியில் கலந்துகொண்டனர், பின்பு செயலாளர் நன்றி கூறக்கூட்டம் முடிவுற்றது. [வி-உ]

* * *

செங்கல்பட்டு—இவ்வூரில் அரசியல் கலப்பற்ற, சமுதாய சீர்திருத்தத்திற்குப் பாடுபடுவதற்கென "இளைஞர் அறிவு மன்றம்" என்ற ஒன்று 16-10 49ல்நிறுவப்பட்டது. ஷை மன்ற உறுப்பினர்களின் கூட்டத்தில் கீழ்க்கண்டபடி செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தலைவர்- ஏகாம்பரம்; செயலாளர்கள்— ஜி. கோதண்டராமன், கண்ணப்பன்; பொருள் உறுப்பினர்— எதிராசன். ஏனைய செயற்குழு உறுப்பினர்கள்— பி. கே. கோதண்டராமன், கசேந்திரன், சந்திரசேகரன், பாலசுப்பரமணியன், கோவிந்தராசன், பலராமன். (செ-ர)

* * *

மம்சாபுரம்— இவ்வூர் பன்னீர் செல்வம் திடலில் 11-10-49அன்று தோழர் கா. அய்யாளுர் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. அது இவ்வூரில் திராவிட முன்னேற்றக் கழகம் கிளையமைப்பதென்றும், இன்னும் சில தீர்மானங்களும நிறைவேற்றப்பட்டது. பிறகு "சமதர்மப் படிப்பகம்" என்ற ஓர் படிப்பகம் நிறுவப்பட்டது. அதற்குப் பத்திரிகை நன்கொடையாளர்களாகக் கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர். தோழர்கள் பா. பழனிச்சாமி, கா. அய்யாளுர், நா. தங்கவேல், ஆ. பால்ராஜ், சு. இராமலிங்கம், நா. காசியப்பன், நா. பால்சாமி. ரெ. தங்கராஜ், செயப்பிரகாஸ், சி. பாதமுத்து, இ. செல்லையா. எனத் தோழர் என். தங்கவேல் எழுதிஇருார்.

* * *

மமுசாபுரம்:—இவ்வூர் கிளையின் செயற்குழுத் தேர்தல கூட்டம, தோழர் சோசப் அவர்கள் தலைமையில் 7-10-49ல் நடைபெற்றது. அதுபோது கீழ்க்கண்ட செயலுறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

விளம்பர உறுப்பினர்.—ஏ. பி. கே.சாமி.ஏனைய செயற்குழுவினர்:— வ. த. துரைசாமி, ந. அங்கையா, ரா. சோசப், சி. பாதமுத்து, ஏ. பி. கே. சாமி, சு. கன்னியப்பன், மா. பொன்னுசாமி, பி. இராமசாமி: மு. அய்யனுர். பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. நன்றி கூறலுடன் கூட்டம் முடிவுற்றது. (வி. உ.)

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.